கல்யாண, முகூர்த்தப் பட்டுப் புடவைகளுக்கு கைராசியான இடம்
இளவரசி
சேலைச் சோலை
57, சிறப்பு அங்காடி, (உள்ளகம்)
யாழ்ப்பாணம்.
[சி-9729]

அக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

பட்டுச் சேலைகளின் சோலையாகத் திகழும் ஒரே இடம்!
இளவரசி
சேலைச் சோலை
57, சிறப்பு அங்காடி, (உள்ளகம்)
யாழ்ப்பாணம்.
[சி-9729]

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 மாசி 23 செவ்வாய்க்கிழமை (07 – 03 – 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 100

# கருத்துப் பரிமாற தனி ஒரு நடுவரை நியமிக்கும் சந்திரிகாவின் யோசனையை பிரபா நிராகரிப்பு

## பதில் கடிதம் அனுப்பி வைத்தார்

யாழ்ப்பாணம், மார்ச். 7

தலைவர் பிரபாகரனுக்கும் தமக்கும் இடையில் கருத்துக்களைப் பரிமாறுவதற்கு வசதியாக பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த நடுவர் ஒருவரை நியமிப்பதற்கு யோசனை தெரிவித்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, தலைவர் பிரபாகரனுக்கு இரகசியக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்தார்.

ஆனால் இந்த யோசனையைத் தலைவர் பிரபாகரன் ஏற்க மறுத்து விட்டார்.

ஜனாதிபதி சந்திரிகா தனிப்பட்டதும் மிகவும் இரகசியமானதும் எனத் தலைப்பிட்டு, கடந்த 20 ஆம் திகதி கடிதம் ஒன்றை இரகசியமான முறையில் தலைவர் திரு வே பிரபாகரனுக்கு அனுப்பி வைத்தார்.

அக்கடிதத்தில்—

இனப்பிரச்சினை சம்பந்தமாக கருத்துக்கள், யோசனைகளைப் பரிமாறிக் கொள்வதற்காக —நடுநிலையான— ஒரு தனிமனிதரைத் தான் பயன்படுத்த விரும்புவதாகவும்—

அவர் நேரடியாக வந்து தனது (சந்திரிகாவினது) யோசனைகள், கருத்துக்களை தலைவர் பிரபாகரனுக்கு எடுத்துக்கூறுவார் என்றும்—

தலைவர் பிரபாகரன் தம்முடைய கருத்தை அவரிடம்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஜெரியின் பதவிக் காலம் மே மாதத்துடன் முடிவு

### நீடிப்பு சாத்தியம் இல்லை

இராணுவத்தளபதி ஜெரிடி சில்வாவின் பதவிக்காலம் எதிர்வரும் மேமாதத்துடன் முடிவடைகிறது.

இதனால் இராணுவத் தலைமைப் பீடத்தின் கவனம் திசை திரும்பியுள்ளதாக "சண்டே லீடர்" தகவல் வெளியிட்டுள்ளது.

ஜெரிடி சில்வா தமது பதவி நீடிப்புக்காக பலவீன நிலையிலிருந்து கொண்டு போராட வேண்டியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இது காலவரை அவருக்கு ஆதரவாகச் செயல்பட்டுவந்த ஜெனரல் வனசிங்கா இப்போது பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இல்லாதது அவருக்கு பெருத்த இழப்பைக் கொடுத்துள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதே வேளை ஜெனரல் வனசிங்கா மீது சுமத்தப்பட்டுள்ள ஊழல் குற்றச் சாட்டுக்களிலிருந்து தம்மை தூரத்தில் வைத்துக் கொள்ளும் முயற்சியில் ஜெரிடி சில்வா ஈடுபட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

உண்ணாவிரதம் இருந்து வரும்

## கைதிகளை அரச அதிபர் நேற்று பார்வையிட்டார்

### கொழும்புக்கு அவர் அவசர செய்தி

யாழ்ப்பாணம், மார்ச். 7

உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ள யுத்தக் கைதிகளை யாழ் அரச அதிபர் திரு. கே பொன்னம்பலம் நேற்று நேரில் சென்று பார்வையிட்டார்.

உண்ணாவிரதிகளின் நிலைமை தொடர்பாக அரசுக்கு அவசர செய்தி ஒன்றையும் அவர் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு ஊடாக கொழும்புக்கு அனுப்பிவைத்தார்.

இதேவேளை — உண்ணாவிரதத்தின் ஆறாவது நாளான நேற்று கைதிகளின் உடல் நிலை மோசமடைந்திருந்தது. விசேட மருத்துவக் குழு ஒன்று அவர்களின் உடல் நிலையை நேற்று பரிசோதித்தது. [ஐ-4-7]

வெட்டுப்புள்ளி பாதிப்புக்கு எதிராக

## யாழ். நகரில் நாளை கண்டனப் பேரணி!

யாழ்ப்பாணம், மார்ச் 7

அரசின் பல்கலைக்கழக அனுமதிக் கொள்கையை எதிர்த்து 1994-95 ஆம் கல்வியாண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிக்குரிய வெட்டுப் புள்ளியினால் பாதிக்கப்பட்ட யாழ். மாவட்ட மாணவர்கள் ஏற்பாடு செய்துள்ள கண்டனப் பேரணி நாளை யாழ். நகரில் நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் இருந்து காலை 9 மணிக்கு பேரணி ஆரம்பமாகும். அதற்கு முன்னர் அங்கு பொதுக்கூட்டம் ஒன்று நடைபெறும்.

பேரணி பல்கலைக்கழகத்தில் இருந்து ஆரம்பமாகி பரமேஸ்வராச் சந்தி — சிவன் கோவில் வீதி வழியாக கோவில் வீதிக்குச்சென்று அங்கிருந்து யாழ். செயலகத்தை நோக்கிச்செல்லும்.

பாதிக்கப்பட்ட மாணவர் சார்பில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கு விலாசமிடப்பட்ட மகஜர் பேரணியின் முடிவில் யாழ் அரசாங்க அதிபர் திரு. க. பொன்னம்பலத்திடம் கையளிக்கப்படும்

தமிழ் மாணவரின் கல்வித் துறைக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிராகக் குரல் கொடுக்கும் இக்கண்டனப் பேரணியில் அணி திரளுமாறு பேராசிரியர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் ஆகியோருக்கு பாதிக்கப்பட்ட மாணவர் குழு அழைப்பு

[5 ஆம் பக்கம் பார்க்க]

## நிவாரணப் பொருள்கள் விநியோகம் தாமதமாம்

யாழ்ப்பாணம், மார்ச் 7

இடம்பெயர்ந்த மக்களுக்கு நிவாரணமாக வழங்கப்படும் உலர் உணவுப் பொருள்கள் விநியோகம் தாமதமாக நடைபெறுவதாகச் சுட்டிக் காட்டப்படுகிறது.

யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதி இது குறித்து பிரதேச செயலர்களுக்கு சுற்றறிக்கை மூலம் கவனத்துக்குக் கொண்டுவந்திருக்கிறது.

யாழ். மாவட்டத்திலுள்ள 56 ஆயிரம் இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கும் அரிசி, மா, சீனி, பால்மா, பருப்பு போன்ற பொருள்கள் ஜனவரி மாதம் 15 ஆம் திகதி வரைக்கும் சங்கங்களுக்குவழங்கப்பட்டு விட்டதாகவும் —

ஆனால் செயலக உத்தியோகத்தர்கள் சங்கக் கிளைகளை பார்வையிட்ட வேளையில் இடம்பெயர்ந்த மக்கள் உலர் உணவுப் பொருள்களை பெற்றுக் கொள்ளாதிருப்பது தெரியவந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஜனவரி இறுதி இரு வாரங்கள் தொடக்கம் பெப்ரவரி முதல் இரு வாரங்கள் வரைக்குமான உலர் உணவு வியோகத்திற்கான பொருள்கள் வந்துசேர்ந்துள்ளன. இவற்றையும் உடனடியாக விநியோகிக்க நடவடிக்கை எடுக்குமாறு சகல பிரதேச செயலர்கள் மற்றும் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களையும் புனர்வாழ்வுப் பகுதி கேட்டுள்ளது. (அ-4)

## வெளிநாட்டு மத்தியஸ்தத்தை புலிகள் விரும்பவில்லை எனக் கூற முடியாது!

### அன்ரன் பாலசிங்கம் விளக்கம்

யாழ்ப்பாணம், மார்ச் 7

நடுவர் ஒருவரை நியமிப்பதை நிராகரித்து தலைவர் எழுதிய கடிதத்தை வைத்துக் கொண்டு நாம் வெளிநாட்டு மத்தியஸ்தரை விரும்பவில்லை என்று கூறமுடியாது.

இப்போது நடைபெறும் பேச்சுவார்த்தைகள் தோல்வியுற்றால் — அதாவது இரு தரப்பினர் மத்தியிலும் பரஸ்பர நம்பிக்கையும், நல்லெண்ணமும் ஏற்படாமல் இந்தப் பேச்சு முடிவடைந்து போனால் — ஒரு வெளிநாட்டு மத்தியஸ்தத்தை விடுதலைப் புலிகள் வரவேற்பார்கள் அதற்கான சூழ்நிலை இப்போது பிறக்கவில்லை.

(5 ஆம் பக்கம் பார்க்க)

## மேற்குலக ராஜதந்திரிகள் இன்று யாழ். வருகை

யாழ்ப்பாணம், மார்ச். 7

பன்னிரண்டு மேற்குலக நாடுகளைச் சேர்ந்த — கொழும்பை வதிவிடமாகக் கொண்ட — 12 ராஜதந்திரிகள் இன்று காலை 7 மணிக்கு பருத்தித் துறைக்கு வந்து சேர்வர் என எதிர்பார்க்கப்படுகின்றது

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் வாகன அணியில் நேற்றுக் காலை கொழும்பில் இருந்து புறப்பட்ட இந்த ராஜதந்திரிகள் நேற்று நண்பகல் திருகோணமலையை சென்றடைந்ததாகவும் —

மாலை 5 மணியளவில் அங்கிருந்து "சீடான்ஸர்" கப்பல் மூலம் அவர்கள் யாழ்ப்பாணம் நோக்கி புறப்பட விருந்ததாகவும்

செஞ்சிலுவை சர்வதேசக் குழு அதிகாரி ஒருவர் நேற்று மாலை யாழ்ப்பாணத்தில தெரிவித்தார்.

இன்று காலை இக்கப்பல் பருத்தித்துறையை வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கப்பலில் வரும் ராஜதந்திரிகள் யாழ். நகரில் சுபாஷ் ஹோட்டலில் தங்குவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

## பூநகரி தோல்விக்கு காரணமானவர் புலனாய்வுப் பணிப்பாளராக நியமனம்

கொழும்பு, மார்ச். 7

விடுதலைப் புலிகளிடம் பூநகரி இராணுவ முகாம் வீழ்ச்சியடைந்ததற்கு குற்றவாளிகளாகக் காணப்பட்ட இராணுவ அதிகாரிகளில் ஒருவரான பிரிகேடியர் சாந்த கொட்டகொட என்பவரே இராணுவப் புலனாய்வுப் பிரிவின் புதிய பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுவரை காலமும் பணிப்பாளராக பணிபுரிந்துவந்த பிரிகேடியர் சூள செனவிரத்தினா பயிற்சிக்காக அமெரிக்கா சென்றிருந்த போது அங்கு பெண் அதிகாரி ஒருவருடன் தகாத முறையில் நடந்து கொள்ள முயற்சித்தார் என்ற குற்றச் சாட்டுக்கு இலக்கானார். அதனை அடுத்து அவர் இடமாற்றம் செய்யபட்டார் என்பது தெரிந்ததே (இ-எ)

கற்பிட்டி முகாமுக்கு அருகில் காணப்படும்

## புலிகளைச் சுடத் தயங்காதீர் என கடற்படை கொமடோர் உத்தரவு!

### பின்னர் தளபதி தலையிட்டு தடுத்தார்

கொழும்பு, மார்ச் 7

கற்பிட்டி கடற்படை முகாமுக்கு அருகில் காணப்படும் விடுதலைப் புலிகளை சுடத் தயங்க வேண்டாம்

கடற்படையின் கொமடோர் ஒருவர் அண்மையில் கடற்படை முகாம் படையினர் மத்தியில் பேசும் போது முன் கண்டவாறு தெரிவித்ததாக "சண்டே ரைம்ஸ்" வார இதழ் தகவல் வெளியிட்டுள்ளது.

அந்தக் கொமடோர் சென்ற பின்னர் கற்பிட்டி கடற்படை முகாம் தளபதி படையினரை மீண்டும் அழைத்து "கொமடோர் தன்னை மறந்த நிலையில் பேசிவிட்டு போகிறார். அவரின் உத்தரவுக்கு காது கொடுக்க வேண்டாம். மோதல் தவிர்ப்பு நிலை இருப்பதால் கடற்படை முகாமுக்கு மிகவும் அருகில் விடுதலைப் புலிகள் வந்தாலும் கூட சுடக்கூடாது" என்று தெரிவித்தார்.

கற்பிட்டிக் கடற்படைத் தளபதியின் இச் சமயோசிதத்தால் அசம்பாவித நிலைவரம் தவிர்க்கப்பட்டதாகவும் இராணுவப் பகுப்பாய்வாளர் ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

(2 ஆம் பக்கம் பார்க்க)

## படைத் தளபதிகள் சகிதம் அனுருத்த வவுனியா விஜயம்

கொழும்பு, மார்ச். 7

பாதுகாப்புப் பிரதி அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்த நேற்று முன்தினம் வவுனியாவுக்கு விஜயம் செய்தார்.

தாண்டிக்குளம் பகுதிக்குச் சென்ற அவர் இராணுவத்தினரையும், பயணிகளையும் சந்தித்து உரையாடினார்.

அவருடன் ஜனாதிபதியின் செயலாளர் பாலபட்டபென்டி, பாதுகாப்பு செயலாளர் சந்திரானந்த டி சில்வா, இராணுவத் தளபதி ஜெரி டி சில்வா, விமானப்படைத் தளபதி ஒலிவர் ரணசிங்க, பொலீஸ் மா அதிபர் பிராங் டி சில்வா ஆகியோரும் சென்றிருந்தனர்.

அநுராதபுரத்தில் தடைமுகாம் ஒன்றை அமைத்து வடக்கே செல்லும் லொறிகளை சோதனை செய்வது தொடர்பாக பிரதி பாதுகாப்பு அமைச்சர் அங்கு ஆராய்ந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-3-7)

## கொழும்பில் புலிகளின் தற்கொலைப் படையாம்!

### சிரேஷ்ட பொலீஸ் அதிகாரி தகவல்

கொழும்பு, மார்ச் 7

விடுதலைப்புலிகளின் தற்கொலைப்படை பிரிவு ஒன்று கொழும்பில் தற்போது தங்கியிருப்பதாக சிரேஷ்ட பொலீஸ் அதிகாரி ஒருவரை மேற்கோள் காட்டி 'சண்டே லீடர்' வாரஇதழ் செய்தி வெளியிட்டிருக்கிறது.

18 பேரைக் கொண்ட இத் தற்கொலைப் படைப் பிரிவு மூன்று வெவ்வேறு குழுக்களாக கொழும்புக்கு வந்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

விடுதலைப்புலிகள் தலைவர்களில் ஒருவரான பொட்டம்மானின் உத்தரவை எதிர்பார்த்து இக்குழுக்கள் தங்கியிருப்பதாகவும் அவர் கூறினார்.

இத்தகவல் கிடைத்ததைத் தொடர்ந்து, கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை விசேட பொலீஸ்குழு ஒன்று கொழும்பில் உள்ள பல விடுதிகளை முற்றுகையிட்டுச் சோதனையிட்டது

அப்போது கைதான பல தமிழர்கள் இரகசியமான இடம் ஒன்றில் தடுத்து வைக்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுடன் இன்று ராஜதந்திரிகள் பேச்சு

இன்று காலை யாழ். வரும் மேற்குலக நாடுகளின் ராஜதந்திரிகள் குழு இன்று காலை 10 மணிக்கு விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்து பேச்சு நடத்துவார்கள்.

சமாதான முயற்சியில் விடுதலைப்புலிகளின் நிலைப்பாடு புனரமைப்புப் பணிகள், சர்வதேச மத்தியஸ்தம், போன்ற விடயங்கள் குறித்து விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் அவர்களுக்கு விளக்குவர் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

குழுவினர் இன்று யாழ் ஆஸ்பத்திரிக்கும், யாழ் செயலகத்துக்கும் சென்று தற்போதைய நிலை குறித்து கேட்டறிவர்.

யாழ். மாவட்டத்தில் சேதமடைந்த பகுதிகளையும் அவர்கள் பார்வையிடுவர்.

நாளை அரச சார்பற்ற தொண்டர் அமைப்பு பிரதிநிதிகளைச் சந்தித்த பின்னர் நாளை நண்பகலில் ராஜதந்திரிகள் குழு கொழும்பு திரும்பும். (உ-3-7)

அபிவிருத்திக் குழு பிரதிநிதிகள்

## புலிகள் தரப்பிலிருந்து விவரம் கோருகிறது அரசு

கொழும்பு, மார்ச் 7

வடக்கு கிழக்கு மாகாண அபிவிருத்திக்கான செயற்பாட்டுக்குழுவில் இடம்பெறும் பிரதிநிதிகளின் பெயர் விவரங்களை விடுதலைப் புலிகளிடம் இருந்து அரசு கோரியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதிநிதிகளின் பெயர் விவரங்களை அனுப்பி வைக்குமாறு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா விடுதலைப் புலிகளுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியிருக்கிறார்.

மேற்குநாட்டுராஜதந்திரிகள் குழுவின் யாழ் விஜயம் இடம்பெறும் வேளையில் அமைச்சரின் இந்த அறிவிப்பு வெளியாகியிருப்பது குறிப்பிடத்தக்கது என செய்தி ஏஜென்சி ஒன்று தெரிவித்தது. (ஐ-7)

## சிவானந்தன் காலமானார்

யாழ்ப்பாணம், மார்ச். 7

யாழ்ப்பாணம் கல்வி வலயம் ஒன்றின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் [அபிவிருத்தி] திரு. இ சிவானந்தன் நேற்றுக் காலமானார்.

இறக்கும் போது அவருக்கு வயது 53. நோய்வாய்ப்பட்டு யாழ். ஆஸ்பத்திரியில் சில வாரங்கள் சிகிச்சை பெற்று வந்தார்.

விஞ்ஞானப் பட்டதாரியான இவர் ஒரு நாடக எழுத்தாளரும், இயக்குநரும் ஆவார். (அ-4-13-15)

## பாடசாலைகள் நண்பகலுடன் மூடப்படும்

காலஞ்சென்ற பிரதிக் கல்விப் பணிப்பாளரின் பூதவுடல் இன்று பிற்பகல் 2 30 மணிக்கு அவர் பணியாற்றிய — நல்லூரில் உள்ள— கல்வி

[5 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## "வில்லிசைக் கலாநிதி"யை வாழ்த்துகிறோம்

பருத்தித்துறை கொட்டடி சித்தி விநாயகர் ஆலய மஹோற்சவத்தில் கந்தபுராண வில்லிசை நிகழ்ச்சி 10 தினங்களும் நடத்தி "வில்லிசைக் கலாநிதி" என்னும் பட்டமும், தங்கப்பதக்கமும், பொன்னாடை, பாராட்டுகளும் பெற்ற ஈழநல்லூர் ஸ்ரீதேவி வில்லிசைக்குழு S. S. சர்மா அவர்களை நாமும் பாராட்டி வாழ்த்துகிறோம். இவர் கலைப்பணி சிறக்க அம்பிகையை பணிகின்றோம்.

இங்ஙனம்
**சிவஸ்ரீ ச. மகேஸ்வரக் குருக்கள்**
(தலைவர் இந்துமத குருமார் ஒன்றியம்)
ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் கோவில் சுதுமலை

(35546)

## ஓராண்டு நினைவு

மலர்வு: 16 - 09 - 1955



உதிர்வு: 07 - 03 - 1994

முனைவர்
**திருமதி சுலோசனா மகேந்திரன்**
[M. Phil, Ph, D]

தேனூறும் கவிதை மழை
பொழிய வானின்
திருமேனி செந்தழலில்
வெந்ததாமோ
வானூறும் வண்டமிழில் - எம்
துயர் வடிக்க வரிகள் சில
எழுதுகையில்
நெஞ்சம் விம்மி கண்பனிக்கும்
நீர் அருவி காகிதத் தில்
எண்ணரிய உணர்வுகளை
சொல்வடிவில் ஏந்தி நிற்கும்
செந்தமிழை அள்ளிச் செல்லும்
நீர்மையது நின் நினைவை
நெஞ்சு நிற்க நீள் புவியில்
நிலை நிறுத்தும் பெற்றி கண்டாய்
கூர்மையது கொடுவாளில் இல்லை
யென்போம்
கூற்றுவனின் கொடு விலங்கில்
கூர்மை கண்டே அழுகின்றோம்
ஆண்டு தோறும் அல்லலுற்று
வழுத்துகின்ற நின் நினைவில்
தேற்றம் கண்டே

உயிர்வேதியல்துறை,
மருத்துவபீடம்,
யாழ். பல்கலைக்கழகம்

[சி/721]

## முதலாம் ஆண்டு நினைவில் எங்கள் நினைவஞ்சலி



**அமரர் முருகர் துரையப்பா**
(ஏழாலை மேற்கு)

பெற்றோர் கரங்களில் 22-8-1913
குடும்பத்தவர் மனங்களில் 07-03-1994

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"

அன்பு, பாசம் இவற்றின் இருப்பிடமாகத் திகழ்ந்து. எம்மைச் சிறந்த முறையில் வழி நடத்தி உயர்வித்த எங்களின் அன்புத் தந்தையே! மாமாவே! அம்மப்பாவே! அப்பப்பாவே! உங்களின் ஆசீர்வாதத்தையும், பாதுகாவலையும் என்றென்றும் எமக்கு அளிப்பீர்களாக! நீங்கள் விட்டுச் சென்ற கடமைகளை நாங்கள் பொறுப்புடன் நிறைவேற்றுவோம். என்றும் உங்களின் நினைவுடன் வாழும்.

மக்கள், மருமக்கள்,
மழலைகள்: அனுசியா, சஞ்சீவ்ராஜ்,
துவாரகன் துஸ்யந்தன், சாமந்தி
"குஞானந்தவாசா"
ஏழாலை மேற்கு.

(8268)

யாழ் / வண். கிழக்குக் கலட்டி
ஸ்ரீ வீரகத்திப்பிள்ளையார் கோவில்

## இலக்ஷார்ச்சனை

08 - 03 - 95 தொடங்கி 17 - 03 - 95 வரை
காலை மாலை வேளைகளில்
நடைபெறவுள்ளது.

இங்ஙனம்,
ஆதீன கர்த்தாவும்,
பிரதம குருவுமான
**சிவஸ்ரீ து. விவேகானந்தக் குருக்கள்**

(35542)

## 6-ம் ஆண்டு நினைவஞ்சலி

சந்தோஷ மலர்வு: 11 - 03 - 1954



சடுதியிலே உதிர்வு: 07 - 03 - 1989

செல்வன்
**சாந்தலிங்கம் சற்குருநாதன்**
[ "சிவநிலையம்" வேலணை கிழக்கு]

ஆறாண்டு சுழிந்ததண்ணா - நாங்கள்
ஆறு பேர் ஐந்தாகி
தேறாது எம்மனது தேடுகிறோம் உங்களையே
பாசப் பறவைகளாய் - நாம்
பகிர்ந்துண்டு வாழ்கையிலே
ஈசனுக்கு உம்மேலே ஆசைதான் வந்ததுவோ
அன்பு அம்மா துடிக்கின்றார்
ஆசை அண்ணா ஏங்குகிறார்
அன்புத்தம்பி கலங்குகின்றார்
அக்காமார் வாடுகின்றார் - உங்கள்
ஆசை முகம் காணாமல்
கணப் பொழுதும் பிரியாமல்
களிப்புடனே வாழ்ந்திருந்தோம்
கண்ணூறு பட்டதுவோ - அண்ணா
கணப் பொழுதில் எமைப்பிரிந்தீர்
செல்வமே! எங்களின் தேவைகளை பூர்த்திசெய்தீர்
தேகசுகம் பாராமல் தினமும் எமக்குழைத்தீர்
கூண்டைப் பிரிந்து பறந்து விட்ட குருவியது
மீண்டும் வரும் என்று விழிகலங்கி நிற்கின்றோம்
ஆண்டவனே எம் செல்வத்தை அனுப்பிவை - எங்களிடம்
மீண்டும் ஒன்றாய்ப் பிறப்பதற்கு வேண்டுகிறோம் - உந்தனிடம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தங்கள் பிரிவால் வாடும்:
அன்பு அம்மா அண்ணா, அண்ணி,
அக்காமார், அத்தான்மார், அன்புத்தம்பி,
ஆசைத்தங்கை, மாமா, மச்சான்மார்,
மச்சாள்மார், மககள் மருமக்கள்,
உறவினர்,

14/1 A, விதானையார் லேன்,
சுண்டிக்குளி.

தகவல்;
லதா சாந்தலிங்கம்.
[தங்கை]

(35538)

## 31ஆம் நாள் நினைவில்

தோற்றம்: 06 - 08 - 1939



மறைவு: 05 - 02 - 1995

**செல்வி செல்வம் வைத்திலிங்கம்**
(S P.H.M , M.O H. Office, Kopay)

காலையில் உதிக்கும் கதிரவனும் உங்கள்
கடமை உணர்வினைக் காட்டி நிற்கிறான்
பணியினில் முழுமை கண்ட நீங்கள்
பாரினில் விடுதலை பெற்றதால்
விடிவினில் எமக்கு ஒளியின்றி
விதியினை நொந்து விம்மி அழுகின்றோம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

ஊழியர்கள்
சு. வை. அ. பணிமனை,
கோப்பாய்.

(35547)

## ஆலயங்களில்

பண்ணாகம் விசவத்தனை முருகமூர்த்தி கோயில் வருடாந்த உற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பத்துத் தினங்கள் நடைபெறும். உற்சவ நாட்களில் காரைநகர் கம்பன் கழக அமைப்பாளர் திரு. த. சிவகுமாரன் கந்த புராணச் சிறப்புகள் பற்றித் தொடர் விரிவுரை ஆற்றுவார். (க-28)

★ ★ ★

வட்டுக்கோட்டை சங்கரத்தை பத்திரகாளி அம்பாள் ஆலய, வருடாந்த மஹோற்சவப் பெருவிழா, நாளை 8 ஆம் திகதி புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

தொடர்ந்து இம்மாதம் 16ஆம் திகதி வியாழக்கிழமை சப்பறத் திருவிழாவும், 17ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர், 18 ஆம் திகதி சனிக்கிழமை தீர்த்தம் என்பனவும் இடம் பெறும்.

திருவிழாக் காலங்களில் தினமும் மாலை 7-30—8-30 மணிவரை சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கத்தின் தெய்வீகப் பேருரையும் இடம் பெறும். [இ-5]

★ ★ ★

யாழ். நாயன்மார்க்கட்டு ஸ்ரீ வெயிலுகந்த விநாயகர் தேவஸ்தான மஹோற்சவம், நாளை புதன் கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்தும் 10 தினங்கள் நடைபெறும் இம்மாதம் 16 ஆம் திகதி தேரும், 17 ஆம் திகதி தீர்த்தமும், 18 ஆம் திகதி பூங்காவனமும் இடம் பெறும் (ஓ-5)

★ ★ ★

யாழ். வண்ணார்பண்ணை நீராவியடி தோப்பு ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் கோயில் வருடாந்த கும்பாபிஷேகதின மணவாளக்கோல அலங்கார உற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை தொடக்கம் இம்மாதம் 16 ஆம் திகதி வியாழக்கிழமை வரை நடைபெறும்.

17ஆம் திகதி வெள்ளிக்கிழமை விசேட பூசையும் அன்னதானமும் இடம் பெறும்.

உற்சவ காலங்களில் அபிஷேகம் மற்றும் பண்ணிசை, இன்னிசைக் கச்சேரி, சொற்பொழிவு என்பனவும் நிகழும். (ஓ-5)

## மாநகர சபை மகளிர் தின விழா

யாழ்ப்பாணம், மார்ச். 7

யாழ் மாநகராட்சி மன்றம் நடத்தும் சர்வதேச மகளிர் தின விழா நாளை பிற்பகல் புதன்கிழமை 2 30மணி முதல் நாவலர் கலாசார மண்டபத்தில் யாழ். மாநகராட்சி மன்ற ஆணையாளர் திரு. வே.பொ பாலசிங்கம் தலைமையில் நடைபெறும். (ஐ-எ)

## செஞ்சிலுவை டாக்டர் யாழ். வருகிறார்

யாழ்ப்பாணம், மார்ச். 7

கடந்த முதலாம் திகதி தொடக்கம் நீராகாரம் அருந்தி உண்ணாவிரதம் மேற்கொண்டு வரும் யுத்தக் கைதிகளின் உடல் நிலையை பரிசோதிக்க செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் டாக்டர் ஒருவர் இன்று யாழ்ப்பாணம் வருகிறார்.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் மருத்துவ சேவையைச் சேர்ந்த டாக்டர் டைஸ் என்பவரே இன்று இங்கு வரவுள்ளார்.

திருமலையில் இருந்து இன்று பருத்தித்துறைக்கு கப்பலில் வரவுள்ள மேற்கு நாட்டு ராஜதந்திரிகளுடன் இவர் இங்கு வந்து சேர்வார். [ஐ-3]

## புலிகளைச்----

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி சமாதானத்தைக் கொண்டு வர முயற்சிக்கும் இத்தருணத்தில் படை உயர் அதிகாரிகள் ஒழுங்காக நடந்து கொள்ளவேண்டும் என்பதை சொல்ல வேண்டிய தருணம் அரசாங்கத்துக்கு ஏற்பட்டுள்ளதாகவும் இராணுவ பகுபாய்வாளர் தெரிவித்துள்ளனர்.

சம்பந்தப்பட்ட கடற்படைக் கொமடோர் கொழும்பிலிருந்து கற்பிட்டிக்கு தமது உத்தியோபூர்வ காரில் வந்த போது தமது பெண் செயலாளருடன் வர்த்தகர் ஒருவரின் வீட்டில் இரவு தங்கிவிட்டு மறுநாளே கற்பிட்டிக்கு சென்றார் என்றும்—

அன்றைய தினம் படையினர் மத்தியில் பேசிய போதே மேற்கண்டவாறு கூறினார் என்றும் "சண்டேடைம்ஸ்" தகவல் வெளியிட்டுள்ளது. (ஐ-எ)

உ

## சுன்னாகம் ஐயனார் ஆலய வருடாந்த மகோற்சவம் 1995

07 - 3 - 95 காலை 10.00 மணி கொடியேற்றம்
12 - 3 - 95 மாலை 03.00 மணி வசந்தோற்சவம்
14 - 3 - 95 மாலை 03.00 மணி வேட்டைத்திருவிழா
15 - 3 - 95 மாலை 07.00 மணி சப்பறம்
16 - 3 - 95 காலை 10.00 மணி தேர் உற்சவம்
17 - 3 - 95 காலை 10.00 மணி தீர்த்தோற்சவம்
19 - 3 - 95 காலை 9.00 மணி பொங்கல் விழா

மகோற்சவ குரு: சிவஸ்ரீ நா. சர்வேஸ்வரக் குருக்கள்
[கதிரமலைச் சிவன் தேவஸ்தானம் சுன்னாகம்]

தினமும் இரவு தெய்வீக சொற்பொழிவு நடைபெறும்
ஐயன் அடியார்கள் அனைவரும் வருகை தந்து விழாக்களை தரிசித்துய்யுமாறு வேண்டுகிறேன்.

சி. ஐ கந்தசாமி
பூசகரும், ஒரு வருட உரிமைப் பங்காளனும்.

சுன்னாகம்,
6. 3. 95

[8270]

## தவறி விட்டது

கொக்குவில் குளப்பிட்டி திருநெல்வேலி வீதியில் 6-03-95 அன்று பிற்பகல் ஒரு பையுடன் நகைகள் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கருணை கூர்ந்து தந்து உதவுமாறு பணிவன்புடன் வேண்டுகிறோம் சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு:-
வ. சிவம்

சாளினி ஸ்டோர்ஸ்,
மாதா கோவிலடி,
மானிப்பாய்.

[35548]

## கண்ணீர் அஞ்சலி

வட இலங்கைச் சங்கீத சபையின்
உபதலைவர்
அறிஞர்
**இராமுப்பிள்ளை சிவானந்தன்**
அவர்கள்

வட இலங்கைச் சங்கீத சபையின் உபதலைவரும், யாழ்ப்பாணக் கல்வி வலயம் 01 இன் சிரேஷ்ட பிரதிக் கல்விப் பணிப்பாளரும் [கல்வி அபிவிருத்தி], ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தின் கௌரவ செயலாளரும், நுண்கலை மன்றத்தின் உப தலைவருமான அறிஞர் இராமுப்பிள்ளை சிவானந்தன் அவர்கள் இறைபதம் எய்தியமை குறித்து வ. இ. ச. சபையின் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களை அன்னாரின் குடும்பத்தினருக்கு தெரிவித்துக்கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைவதாக என்றும் பிரார்த்திக்கின்றோம்.

வ. இ. ச. சபையின்
தலைவரும், செயற்குழுவும்.

கல்வித்திணைக்களம்,
யாழ்ப்பாணம்.

[சி/723]

## கண்ணீர் அஞ்சலி

கல்வி அபிவிருத்திக்காக, அரும்பாடுபட்டு உழைத்து கல்விச் சமூகத்தை ஆறாத்துயரில் விட்டு அமரத்துவம் அடைந்த யாழ் மாவட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர்

**இ. சிவானந்தனின்**

ஆத்மா சாந்தியடைய எமது கண்ணீர் பூக்களால் அஞ்சலி செலுத்துகின்றோம்.

த. மகாசிவம்
பொதுச் செயலாளர்
இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்

442, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

[சி/725]

## கண்ணீர் அஞ்சலி

**இரா. சிவானந்தன்**
அவர்கள்
பிரதிக் கல்விப் பணிப்பாளர் - யாழ்./வலயம் - I

தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் ஆரம்ப கால உறுப்பினரும், பேரவையின் தேர்வுக் குழுவின் காப்புக்கிளைப் பணிப்பாளரும், யாழ்ப்பாணக் கல்வி வலயம் ஒன்றின் கல்வி அபிவிருத்திக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளரும், ஆரிய திராவிட பாஷாபிவிருத்தித்திச் சங்கம், நுண்கலைமன்றம் ஆகியவற்றின் செயலாளருமான இரா. சிவானந்தன் அவர்களுடைய மரணச் செய்தி கேட்டு ஆறாத்துயரடைந்துள்ளோம். இவரின் அளப்பரிய சேவையை நினைவு கூருவதோடு, அன்னாரின் பிரிவால் துயரடைந்திருக்கும் துணைவியார், பிள்ளைகள், சுற்றத்தார் அனைவருக்கும் எமது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்து, அவரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவை
யாழ்ப்பாணம்.

[35554]

## கண்ணீர் அஞ்சலி

வடமாகாணக் கல்வி நிருவாக சேவை அலுவலர் சங்கத் தலைவரும், யாழ்ப்பாணம் வலயம் ஒன்றின் பிரதிக் கல்விப் பணிப்பாளருமான

**இரா. சிவானந்தன்**

அவர்களுடைய மரணச் செய்திகேட்டு அதிர்ச்சியடைந்துள்ளோம். அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்தி அவரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு, குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

கல்வி நிருவாக சேவை அலுவலர் சங்கம்
யாழ்ப்பாணம்

(சி-724)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் பழிவாங்கல் குறித்து 15ஆயிரம் ஆசிரியர் முறைப்பாடு

கொழும்பு, மார்ச் 7

கடந்த 17 வருடங்களில் கல்வித் துறையில் மேற்கொள்ளப்பட்ட அரசியல் பழிவாங்கல்கள் காரணமாக பாதிக்கப்பட்ட ஆசிரியர்களிடமிருந்து இதுவரை சுமார் 15 ஆயிரம் முறைப்பாடுகள், கல்வி அமைச்சுக்கு கிடைத்திருப்பதாகத் தெரிய வருகிறது.

1977 ஆம் ஆண்டு ஜூலை 22 ஆம் திகதிக்குப் பின் இடமாற்றம், பதவி நீக்கம், பதவி இறக்கம் மற்றும் பதவி உயர்வு வழங்காமை போன்ற அரசியல் பழிவாங்கல்களுக்கு ஆளாகிய இவர்கள் தமக்கு நிவாரணம் வழங்கக் கோரி கல்வி அமைச்சுக்கு முறைப்பாடுகளை அனுப்பியிருந்தனர்.

இது தொடர்பாக விசாரிப்பதற்கெனபிரதி கல்வி அமைச்சர் தலைமையில் நியமிக்கப்பட்ட விசாரணை குழு—

பாதிக்கப்பட்ட ஆசிரியர்களிடம் இருந்து விரிவான விளங்கங்களைப் பெறும் பொருட்டு, சம்பந்தப்பட்டோருக்கு தனித்தனியான பிரத்தியேக விண்ணப்பப்படிவங்களை அனுப்பி வருவதாகவும்—

பாதிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு நிவாரணம் வழங்கும் ஏற்பாடுகளை துரிதப்படுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

[ஒ-5-14]

## லயன்ஸ் கழகம் நடத்தும் ஆரம்ப கண் பரிசோதனை

யாழ்ப்பாணம், மார்ச் 7

மானிப்பாய் - கோவில்பற்று லயன்ஸ் கழகம் ஒழுங்கு செய்துள்ள வசதி குறைந்தோருக்கான கண் சத்திர சிகிச்சைக்கென நோயாளர்களைத் தெரிவு செய்யும் ஆரம்ப வைத்திய பரிசோதனைகள் எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 7-30 மணிக்கு மானிப்பாய் கிறீன் ஞாபகார்த்த வைத்திய சாலையில் நடைபெறவுள்ளன.

''கற்றறக்'' நோயினால் பாதிக்கப்பட்டுள்ள 55 வயதிற்கு மேற்பட்ட நோயாளிகள் எதிர்வரும் புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மானிப்பாய் இந்துக்கல்லூரியில் தம்மைப் பதிவு செய்து கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

கழக அங்கத்தவர்களூடாகவோ சனசமூக நிலையங்களூடாகவோ ஏற்கனவே பதிவு செய்துள்ளவர்கள் மீண்டும் பதிவு செய்ய வேண்டியதில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

(எ-14)

## யூரியா உரப் பாவனைக்கு மட்டுநகரில் கட்டுப்பாடு

### இராணுவம் நடவடிக்கை

கொழும்பு மார்ச். 7

மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவ முகாம்களுக்கு அருகில் ஒன்றரை மைல் சுற்றளவில் உள்ள நெல்வயல்களில் மட்டுமே யூரியா உரத்தை பாவிக்க அனுமதி வழங்கப்படும் என்று படையினர் அறிவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன் மூலம் எதிர்வரும் சிறுபோக நெற் செய்கையின் போது யூரியா உரம் பாவிக்கப்படுவதைக் கட்டுப்படுத்த இராணுவம் நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(எ-4)

## குறுகிய கால விவசாய பயிற்சி வகுப்புக்கள்

### நாளை ஆரம்பமாகின்றன

யாழ்ப்பாணம், மார்ச் 7

திருநெல்வேலியில் உள்ள மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் குறுகிய கால விவசாய பயிற்சி வகுப்புக்கள் நாளை புதன்கிழமை ஆரம்பமாகின்றன.

நாளை புதன்கிழமை 8ஆம் திகதி உள்நாட்டு மரக்கறிப் பயிர்களில் பயிர்பாதுகாப்பு. 15ஆம் திகதி மரக்கறி பயிர் நாற்று மேடை, 22 ஆம் திகதி பழப்பயிர்களில் பயிர் பாதுகாப்பு, 29 ஆம் திகதி பழப் பயிர் நாற்றுமேடை போன்ற பயிற்சி வகுப்புக்கள் நடைபெறவுள்ளன.

மேற்படி பயிற்சி வகுப்புக்களில் பங்குபற்ற விரும்பும் விவசாயிகள் உடனடியாக தொடர்பு கொள்ளுமாறு மாவட்ட விவசாய பயிற்சி நிலைய உதவி விவசாயப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

[ஒ-17]

## கோப்பாய் உவர்நிலங்கள் விளை நிலங்களாகின்றன

எதற்கும் பயன்படாது காணப்பட்ட கோப்பாய் உப்பாற்றை அண்டிய உவர் நிலங்கள் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் முயற்சியால் விளைநிலங்களாயுள்ளன என அறிவிக்கப்படுகிறது.

தமிழீழத்தில் காணப்படும் உவர் நிலங்களை பயன்பாட்டுக்கு கொண்டு வரும் நோக்கோடு மேற்கொள்ளப்பட்ட பல்வேறான நடவடிக்கைகளின் பயனாக சென்ற காலபோகத்தில் நெற்செய்கை வெற்றியளித்ததைத் தொடர்ந்து இம்முறை பல விவசாயிகள் இந்த உப்பாற்றை அண்டிய பகுதிகளில் நெற்செய்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இக் காலபோக உவர் நில நெற்செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் 25 பேருக்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் உவர் நிலத்தில் விளையும் ஏ ரி 402 இன விதை நெல், உரம் போன்றவை கடன் அடிப்படையில் வழங்கப்பட்டு ஊக்குவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது

(எ)

## சீமெந்து ஊழியர் சம்பளம்

யாழ்ப்பாணம், மார்ச் 7

சீமெந்துக் கூட்டுத்தாபன ஊழியர்களின் பெப்ரவரி மாதச் சம்பளம் இன்றும் நாளையும் காலை 9 மணி முதல் நண்பகல் 12 மணி வரை —

யாழ்ப்பாணம் வர்த்தக வங்கியில் வழங்கப்படும் என்று கூட்டுத்தாபன கணக்காளர் திரு. க மகேஸ்வரன் அறிவித்துள்ளார்.

(ஒ)

## மயானத்தில் சிரமதானம்

யாழ்ப்பாணம், மார்ச் 7

கோண்டாவில் காரைக்கால் மயானம் சிரமதானம் மூலம் புனரமைக்கபட்டு வருகின்றது.

கோண்டாவில் மத்தி, மேற்கு கிராம சேவையாளர் என். சர்வநணசிலன் தலைமையில் அப்பகுதி மக்கள் இணைந்து சிரமதானம் மூலம் மேற்படி மயானத்தை புனரமைத்து வருகின்றனர்

(ஒ-17)

## புலிகளின் குரல் வானொலியில்

07 — 03 — 1995

செவ்வாய் இரவு

- ★ 8-01 — ஊர் சுற்றும் ஒலிவாங்கி
- ★ 8-10 — அறிந்து கொள்ளுங்கள் — தகவற் களஞ்சியம்
- ★ 8-20 — நலந்தனா— நிகழ்ச்சியில் சத்திர சிகிச்சை மூலம் குழந்தை பிறப்பித்தலுக்கான காரணங்கள் பற்றி வைத்திய கலாநிதி சுப்பிரமணியம் அவர்கள் ஆலோசனை வழங்குவார்.
- ★ 8-30—செய்திகள்
- ★ 8-40—கருத்துக்களம் — இ. இராஜேஸ்வரன் எழுதிய ''புரிந்துணர்வு''
- ★ 8-50 — மலரும் மொட்டுக்கள் என்பன இடம் பெறும்

08 — 03 — 1995

புதன் காலை

- ★ 7-02 — மாவீர வணக்கம்
- ★ 7-15—நீங்கள் கேட்டவை
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-40 — நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி என்பன இடம்பெறும்

### தமிழீழ வானொலி

ஒலிபரப்பு

செவ்வாய் மாலை

- ★ 5-01 — சிந்தனைச் சிதறல்
- ★ 5-03 — எழுச்சிக் கீதம்
- ★ 5-10 — புதியவை
- ★ 5-15 — தமிழிசை
- ★ 5-30 — வானொலி மஞ்சூசம் — 10
- ★ 6-00— சிந்தனைக்குச் சில வினாடிகள்
- ★ 6-02 — இவ்வாரம் இவர் — நிகழ்ச்சியில் விளையாட்டு வீராங்கனை செல்வி ஆனந்த நாயகி அவர்களுடனான சந்திப்பு
- ★ 6-15 — விளையாட்டுச் செய்திகள்
- ★ 6-20 — என் தெரிவு
- ★ 6-30 — மணிக்குமாலை நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்

## செஞ்சிலுவைச்சங்க நிர்வாக சபை ராஜினாமாச் செய்வதற்கு மறுப்பு

கொழும்பு, மார்ச் 7

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் நிர்வாகசபை இராஜினாமா செய்ய வேண்டும் என்று சுகாதார நெடுஞ்சாலைகள் சமூக சேவைகள் அமைச்சின் செயலாளர் உத்தரவிட்டுள்ள போதிலும் தொடர்ந்து செயற்படுவதற்கு அந்தச் சபை முடிவு செய்திருக்கிறது

செஞ்சிலுவைச் சங்கத்தின் நிர்வாக சபைக்கூட்டம் கடந்தவெள்ளியன்று கொழும்பில் நடந்த போது இந்த முடிவு எடுக்கப்பட்டது

சங்கத்தின் தலைவர் டி.பி. அபயசிங்க இராஜினாமா செய்து விட்டதாகவும் புதிய தலைவராக பி. டி. உடுவல நியமிக்கப்பட்டிருப்பதாகவும் செஞ்சிலுவைச் சங்க செயலாளர் தெரிவித்துள்ளார்.

நிதி துஷ்பிரயோக குற்றச்சாட்டைத் தொடர்ந்து நிர்வாகசபை ராஜினாமா செய்யப்பட வேண்டுமென அமைச்சு உத்தரவிட்டிருந்தது. ஆனால் இது போன்ற நிதி துஷ்பிரயோகங்கள் இடம் பெறவில்லை என்று செஞ்சிலுவைச் சங்கம் தெரிவிக்கிறது.

செஞ்சிலுவைச் சங்கம் சில அறிக்கைகளை சமர்பிக்க தவறியதன் காரணமாகவே நெதர்லாந்து நிதி உதவியை நிறுத்தியதாகவும் அவர் சொன்னார்.

[இ-4]

## மலேசியாவில் பணியாற்ற இலங்கை பெண் தாதிகள்

### விண்ணப்ப முடிவு திகதி மார்ச் 10

கொழும்பு, மார்ச் 7

மூன்று வருடகால ஒப்பந்த அடிப்படையில் மலேசியாவில் உள்ள அரசு மருத்துவமனைகளில் பணிபுரிய விரும்பும் பெண்தாதிகளிடம் இருந்து இலங்கை சுகாதார அமைச்சு விண்ணப்பங்களைக் கோரியுள்ளது

விண்ணப்ப முடிவு திகதி இம்மாதம் 10 ஆம் திகதிஎன்று அமைச்சின் மேலதிக செயலாளர் தர்மஹேவ மத்தும அறிவித்துள்ளார்.

150 பெண் தாதிகளை தந்துதவும்படி மலேசிய அரசின் சுகாதார அமைச்சு இலங்கை அரசைக் கோரியது. அதற்கிணங்கவே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரர் 10 3 95 இல் 45வயதுக்கு உட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும் இலங்கை வைத்திய சபையில் பதிவு செய்திருத்தல் வேண்டும் மூன்று வருடப் பயிற்சிக் காலத்தின் பின்னர் ஐந்து ஆண்டுகள் சேவையாற்றியிருத்தல் வேண்டும் ஆங்கிலத்தில் நன்றாக பேச, எழுதத் தெரிந்திருத்தல் வேண்டும் இத்தகைமைகளைக் கொண்டவர்களே விண்ணப்பிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது

ஆரம்ப சம்பளமாக மாதம் சுமார் 18ஆயிரம் ரூபா வழங்கப்படும் அதன் பின்னர் சம்பளம் அனுபவத்தைப் பொறுத்து நிர்ணயிக்கப்படும் இலங்கையிலிருந்து மலேசியா சென்று திரும்பி வருவதற்குரிய விமான டிக்கட் இலவசமாக வழங்கப்படும். ஆண்டுதோறும் 25தினங்கள் விடுமுறை வழங்கப்படும் என்று அமைச்சு வெளியிட்ட அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

[எ]

## காணாமற் போனோர் குறித்து இறப்பு பதிவு உடன் செய்ய பணிப்பு

கொழும்பு, மார்ச் 7

இலங்கையில் நடைபெற்ற தீவிரவாத சம்பவங்களின் போதும் வன்செயல் நடவடிக்கைகளின் போதும் காணாமற் போயுள்ளவர்களின் இறப்புகளைப் பதிவு செய்வதற்கான 1995 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க இறப்புப் பதிவுச்சட்டத்தை உடனடியாக அமுல் படுத்துமாறு பதிவாளர் நாயகம் அனைத்து மாவட்ட பதிவாளர்களுக்கும் சுற்று நிருபம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

இந்தச் சட்டம் ஜனவரி 5 ஆம் திகதியில் இருந்து தொடரும் 2 வருடங்களுக்கே செல்லுபடியாகும். எனவே துரிதமாக செயல் பட்டு இறப்புக்களை பதிவு செய்யுமாறு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

முன்னைய நடைமுறையின் படி ஒரு வருடகாலமாக ஒருவர் காணாமல் போயிருந்தால், சாட்சிய சட்டத்தின் 108 ஆம் பிரிவின் கீழ் சாட்சிகளின் அடிப்படையில் ஒருவரின் இறப்பு பற்றி நீதிமன்றமே தீர்ப்பளிக்க முடியும்.

ஆனால் தற்போது மாவட்டப் பதிவாளர்களாக பணியாற்றும் பிரதேச செயலாளர்கள் இதனைத் தீர்மானிக்க முடியும் இந்தச் சட்டத்தின் கீழ் இறப்புக்களை பதிவு செய்வதற்காக கிடைக்கப் பெறும் விண்ணப்பங்களை பொறுப்பேற்றல், விசாரணைகளை நடத்துதல், அத்துடன் இறப்புபதிவுகளை அங்கீகரிக்கும் பணிகளையும் பிரதேச செயலகங்களே மேற்கொள்ளும்.

பதிவுக்கான விண்ணப்பங்கள் இறந்த நபர் இறுதியாக குடியிருந்த மாவட்டத்தின் மாவட்ட பதிவாளரிடம் சமர்பிக்கப்படுதல் வேண்டும்

தற்காலிக ஏற்பாடுகள் சட்டம் 2 வருட காலத்திற்கு மட்டுமே வலுவில் இருக்கும் என்பதால் காணமற் போயுள்ளவர்களின் குடும்பத்தினர் இதன் பிரகாரம்,மரண அத்தாட்சிப் பத்திரம் பெறுவதற்கு உடனடியாக விண்ணப்பிக்க வேண்டும் என்று வடக்குக் கிழக்கு உதவிப்பதிவாளர் நாயகம் எஸ். முத்துக்குமாரன் தெரிவித்துள்ளார்.

(ஒ-4-14)

## அருணோதயாவை அதே இடத்தில் இயங்க வைப்பதற்கு முயற்சி

யாழ்ப்பாணம், மார்ச். 7

கடந்த கால இராணுவ நடவடிக்கை காரணமாக இடம் பெயர்ந்த அளவெட்டி அருணோதயாக் கல்லூரியை மீண்டும் அதே கட்டடத்தில் இயங்க வைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

அருணோதயாக் கல்லூரியின் பெற்றோர் ஆசிரியர் சங்க விசேட பொதுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

அதில் ஏகமனதாக எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கமையவே கல்லூரி மீண்டும் பழைய இடத்துக்கு இடம் மாற்றம் செய்யப்பட உள்ளது.

1991 ஆம் ஆண்டு அளவெட்டிப் பகுதியில் இடம் பெற்ற இராணுவ நடவடிக்கையினால் அங்கிருந்து மக்கள் வெளியேறினர்.

இதனை அடுத்து பிரஸ்தாப கல்லூரி மருதனார் மடம் இராமநாதன் கல்லூரியில் இயங்கத் தொடங்கியது.

(இ 15)

## எமக்குரிய கலைகளும் பண்பாடும் எமது மண்ணில்தான் வளரமுடியும்

### இசை விழாவில் பேராயர் ஜெபநேசன் உரை

எமது கலைகள் எமதுமண்ணில் தான் வளரும்; வளர முடியும். வெளிநாடுகளில் எங்கள் கலைகளும் பண்பாடுகளும் வளர்வதாகச் சொல்லப்படுகிறது ஆனால் பல நாடுகளில் நான் அவதானித்ததன் பிரகாரம் அவை உரிய முறையில் வளர்க்கப்படுவதாக இல்லை.

இவ்வாறு இலங்கை இளங்கலைஞர் மன்றத்தின் பதினைந்தாவது ஆண்டு இசைவிழாவின் பத்தாம் நாள் நிகழ்ச்சியில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பேசிய யாழ்ப்பாணம் தென்னிந்திய திருச்சபையின் அத்தியட்சகர் பேராயர் கலாநிதி சு. ஜெபநேசன் அடிகளார் தெரிவித்தார்.

பேராயர் ஜெபநேசன் மேலும் பேசும்போது கூறியதாவது;

எமது கலைகளும் கலாசாரமும் பேணப்படவேண்டும். ஒரு இனத்தின் எழுச்சியும் உயர்ச்சியும் இந்த வளர்ச்சியிலேயே தங்கியுள்ளது.

வெளிநாடுகளில் வளரும் எமது இளைய தலைமுறையினர் வெளிநாட்டு கலாசாரங்களையே பின்பற்றி வருகின்றனர். இவர்களது பெற்றோரும் தமது பிள்ளைகளிடையே தமிழை முன்னேற்றுவதில் அக்கறை குறைந்தவர்களாகவே இருக்கின்றனர்.

கடந்த பல ஆண்டுகளாக இளங்கலைஞர்களை உருவாக்கி அவர்கள் ஊடாக எமது கலைகள் வளர இளங்கலைஞர் மன்றம் எடுத்து வரும் பெரும் முயற்சியினால் இன்று இந்த மண்ணில் கலைகள் வளர்ந்து வருகிறது அடுத்த ஆண்டில் வெள்ளி விழாவைக் கொண்டாட இருக்கும் இந்த மன்றம் கலையுலகில் மிகப்பெரிய சாதனைகளை நிகழ்த்த வேண்டும் என்பதே எல்லோரதும் விருப்பமாகும்

இவ்வாறு அவர் பேசும்போது கூறினார்.

கலைஞர் சோ. பத்மநாதன் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்ச்சியில் யாழ். தென்னிந்திய திருச்சபையின் செயலாளர் அருட்திரு அ. ஜெயக்குமாரன் சிறப்புரையாற்றினார்.

[இ-5-11]

## சேக்கிழார் ஆராய்ச்சிமையம் நடத்தும் கட்டுரைப் போட்டி

யாழ்ப்பாணம், மார்ச். 7

சென்னையில் இவ்வாண்டு நடைபெறவுள்ள சேக்கிழார் விழாவை ஒட்டி அங்குள்ள சேக்கிழார் ஆராய்ச்சி மையம் மாணவர்களிடையே கட்டுரை போட்டிகளை நடத்தவுள்ளது.

கட்டுரைகள், ''இன்றைய சமுதாயச் சிக்கல்களுக்கு பெரிய புராணம் தரும் தீர்வு'' என்னும் தலைப்பில் அமைய வேண்டும்.

இந்தப் போட்டியில் ஈழத்து மாணவர்களும் கலந்து கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கட்டுரைகள் வெள்ளைத் தாளில் 40பக்கங்களுக்குகுறையாமல் எழுதப்பட வேண்டும். கட்டுரைகள் எதிர்வரும் மே மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாகப் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்:-

கட்டுரைப் போட்டி - 1995,<br>
சேக்கிழார் ஆராய்ச்சி மையம்<br>
19, டாக்டர் நடேசன் சாலை<br>
அசோக் நகர்.<br>
சென்னை 600 083

கட்டுரைகளை பதிவுத் தபாலிலும் அனுப்பலாம் என்றும்-

ஆக்கங்கள், குறிப்பிட்ட மாணவரால் எழுதப்பட்டது என்பதையும், அவரின் கல்லூரி, வகுப்பு, வயது போன்ற விவரங்களையும் உறுதிப்படுத்தும் கல்லூரி அதிபர் அல்லது தமிழ்த்துறைத் தலைவரின் சான்றும் இவற்றுடன் இணைத்து அனுப்பப்படல் வேண்டும் என்றும் —

கட்டுரைப் போட்டியில் கலந்து கொள்ள விரும்புவோர் முன்னறிவிப்பாக, தமது பெயர், கல்லூரி பற்றும் தொடர்பு முகவரி [illegible]

பவற்றை சேக்கிழார் ஆராய்ச்சி மையத்திற்கு எழுதி தெரியப்படுத்த வேண்டும் என்றும் கேட்கப்பட்டுள்ளன.

மனித சமுதாயம் அனைத்துக்கும் பொதுவான கருத்துக்களை, பெரிய புராணத்தின் வாயிலாக பரப்பும் நோக்கில் கடந்த இரண்டு ஆண்டுகளாக சேக்கிழார் விழாவை நடத்திவரும் மேற்படி அமைப்பு இளைஞர் சமுதாயத்திலும் இக்கருத்தை பரப்பும் வகையில் இவ்வாண்டில் மேற்படி போட்டிகளை ஒழுங்கு செய்துள்ளது.

(அ-14)

## விளைச்சலில் சாதனை

சுழிபுரம், மார்ச் 7

பொன்னாலை குளத்துக்கு அண்மையிலுள்ள வயல் ஒன்றிலிருந்து பரப்புக்கு 4 புசல் வீதம் நெல் அறுவடை பெறப்பட்டுள்ளது

வயற் சொந்தக்காரர் உரிய காலங்களில் நீர்ப்பாய்ச்சலை மேற்கொண்டு வந்தமையே இதற்குக் காரணம் என்று கூறப்படுகின்றது.

(இ-14-28)

## போதியளவு உப்பு கையிருப்பில்

யாழ்ப்பாணம், மார்ச் 7

தமிழீழ உப்பு நிறுவனத்தினால் 1994 ஆம் ஆண்டின் இறுதிவரை சேகரிக்கப்பட்டு களஞ்சியப் படுத்தப்பட்ட 60 இலட்சம் கிலோ உப்பில் 38 இலட்சம் கிலோ உப்பு வரை விநியோகிக்கப்பட்டபின் இன்னும். ஒரு வருடகால உப்புத் தேவையைப் பூர்த்தி செய்யக் கூடிய அளவு உப்பு தமிழீழ உப்பு நிறுவனத்திடம் கையிருப்பில் உள்ளதாகவும்-

அண்மைக்காலங்களில் அபிவிருந்தியடைந்துவரும் மீன்பிடித் தொழிலுக்கு உபயோகமாகும் வகையில் மீன் பதனிடலுக்குத் தேவையான அரைத்த உப்பு, அன்றாடத் தேவைகளுக்கான கறியுப்பு என்பவற்றைப் போதுமான அளவில் வழங்குவதற்கு உப்பு நிறுவனம் தயாராக உள்ளதாகவும் அறிவிக்கப்படுகிறது.

வெளியிடங்களிலிருந்து உப்பு எடுத்துவரப்படுவதும், நிர்ணயிக்கப்பட்ட விலையிலும் அதிகமான விலையில் விற்பனை செய்யப்படுவதும் தமிழீழத்தில் தடை செய்யப்பட்டுள்ளதால், பாவனையாளர்கள் அனைவரும் தமக்குத் தேவையான உப்பினைத் தமிழீழ உப்பு நிறுவனத்திடமோ அல்லது அவர்களின் முகவர்களான துரித சந்தைப் படுத்தும் சேவையினரிடமோ தொடர்பு கொண்டு மொத்தமாகவோ, சில்லறையாகவோ பெற்றுக்கொள்ளலாம் என தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

(எ-5)

## இலங்கைக்கு கூடுதல் நிதி வழங்க சீனா இணக்கம்

### அமைச்சர் கதிர்காமர் தகவல்

கொழும்பு, மார்ச் 7

இலங்கைக்கு குறைந்த வட்டியுடன் கூடுதல்நிதி வழங்க சீன அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளதாக வெளிவிவகார அமைச்சர் லஷ்மன் கதிர்காமர் கூறினார்.

கோதுமை வாங்கவும், அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்றவும் கடன் அடிப்படையில் நிதி வழங்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கையை சீன அரசாங்கம் ஏற்றுக்கொண்டதாகவும்

தனது சீனப்பயணம் மிகப் பயன் உள்ளதாக அமைந்ததாகவும் — அவர் கொழும்பில் தெரிவித்தார்.

(ஒ-3)

## ராணுவத்துக்கு அதிகநிதி; இலங்கைக்கு 30-வது இடம்

கொழும்பு, மார்ச். 7

உலகிலேயே இராணுவத்துக்கு அதிக நிதியை செலவிடும் நாடுகளின் பட்டியலில் இலங்கை 30 ஆவது இடத்தில் உள்ளது.

1981 ஆம் ஆண்டில் 85 ஆவது இடத்தைப் பெற்றிருந்த இலங்கை தொடர்ந்து வந்த 13 ஆண்டுகளுக்குள் விரைந்து 30 ஆவது இடத்தைப் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது

அதேசமயம் இலங்கை தனது வரவு - செலவுத் திட்டத்தில் 15 சத வீதத்தை பாதுகாப்புச் செலவினங்களுக்கே ஒதுக்கியுள்ளதாக இராணுவ புள்ளி விபரங்கள் மூலம் தெரியவருகிறது

[இ-5-7]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

கலாசாலை வீதியில் 3 பரப்புக் காணியில் சகல வசதிகளும் அமைந்த வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 115, பாற்பண்ணை வீதி, திருநெல்வேலி. [35508]

### விற்பனையாகிறது

கும்பகர்ணன் வதைப்படலம் யாழ். பல்கலைக்கழகத்தின் வெளிவாரி முதற்கலைத் தேர்வு G. A. Q. பாலபண்டித மாணவர்களுக்கு ஒரு பாடநூல் எல்லாப் புத்தகசாலையிலும் கிடைக்கும். மகிமிலன் புத்தகசாலை, யாழ்ப்பாணம், ஸ்ரீகாந்த் புத்தகசாலை, நல்லூர். (சி-384)

### தவறிவிட்டது

நடராசா நவநிலி ஆகிய எனது அடையாள அட்டை [715261901V] 2-3-95இல் கல்லுண்டாய் வெளிக்கும், சேச்சடி அராலிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து அராலி மேற்கு, வட்டுக்கோட்டை என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். [35536]

கணேச வேல அழகன் ஆகிய எனது அடையாள அட்டை முக்கிய ஆவணங்களுடன் 6-3-95 மாலை 6-00 மணியளவில் பலாலி வீதியில் திருநெல்வேலி சந்திக்கும், கோண்டாவிலுக்கும் இடையில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து உரிய முகவரியில் ஒப்படைக்கவும். [35525]

### இலகு திருமண சேவை

33 வயது. ஆயிலியம், செவ்வாய் 8. Franceஇல் தொழில் புரிபவர் யாழ் உள்ளார். மணப்பெண் தேவை விவாகமாகி அழைத்துச்செல்லலாம். தொடர்பு: ஞாயிறு து. விமலா, யாழ். நாச்சிமார் கோயிலடி. [35535]

### வீனஸ் அன்ரனா

கார் பற்றறி மூலம் 12" கறுப்பு - வெள்ளை ரீ வியில் ரூபவாஹினி - மெட்ராஸ் நிகழ்ச்சிகளை பார்ப்பதற்கு அன்ரனா பொருத்தி வசதி செய்து தரப்படும். (கார் பற்றறி. 12" கறுப்பு - வெள்ளை ரீ. வி. உள்ளவர்கள் தொடர்புகொள்க) வீனஸ் டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி (ஆரியகுளம் சந்தி), யாழ்ப்பாணம். கிளை: கண்டி வீதி, சாவகச்சேரி (சி-397)

### துர்க்கா திருமண சேவை

எல்லா மதத்தவர்க்கும் வெளிநாடு உள்நாட்டுக் குறிப்புகள் உண்டு. தொடர்பு: துர்க்கா திருமண சேவை, வளர்மதி இல்லம். கே. கே. எஸ். வீதி, மல்லாகம். [8267]

### LITERATURE

Answers for past Question Paper 92, 93, 94. English Literature, Poems, Answer to Question on Poems Poetry WorkBooks.Prose andDrama. Oliver Twist Madol Doova by A K Hewage Available at Poobalasingham, Book Depot, Jaffna. (C-601)

## 'விளக்கு' வெளிவந்தது

யாழ்ப்பாணம், மார்ச் 7

"விளக்கு"தை மாத இதழ் வெளிவந்துள்ளது.

பிள்ளையின் ஆளுமை விருத்தி ஆசிரியரும்சமூகமும், பிள்ளையின் விவேகத்தைத் தூண்டுதல், புள்ளிகள் இழப்பதைத் தவிருங்கள் யாழ் பாடசாலையில் உடற்பயிற்சி போன்ற கட்டுரைகள் மற்றும் கவிதைகள், ஆசிரியர் சேவையில் வகுப்புகள், தரங்கள் பற்றிய தொகுப்பு என்பன இந்த இதழில் இடம் பெற்றுள்ளன. (அ)

## கி. மு சங்கங்கள் புனரமைப்பு

வலிகாமம் மேற்கு மார்ச், 7

வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கிராம முன்னேற்றச் சங்கங்கள், மாதர் கிராம முன்னேற்றச்சங்கங்களை புனரமைப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன

இவற்றை புனரமைத்து, இறமையான முறையில் இயங்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கிராம அபிவிருத்தி உத்தியோகத்தரை மேற்படி பிரதேச செயலர் பணித்துள்ளார். (அ-13 173)

---

வண்ணை

## ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்

மஹோற்சவ கால

## தெய்வீகப் பேருரை

பொருள்: இராமாயணம்

நிகழ்த்துபவர்: கம்பகலாசுரபி

**த. சிவகுமாரன்**

(அமைப்பாளர், காரைநகர் கம்பன்கழகம், ஆசிரியர், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி)

காலம்: 08 - 03 - 95 முதல் 19-03 95 வரை இரவு 8-30 —9-30மணி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

– ஆலய நிர்வாகிகள்.

(35524)

---

மானிப்பாய் கோவில்பற்று

## லயன்ஸ் கழகம்

### வசதி குறைந்தோருக்கான

## கண் சத்திர சிகிச்சை

முகாம் இல. 2

கண்ணில் பூப்படலம் (Cataract) வளர்ந்த நோயாளரை சத்திர சிகிச்சைக்குத் தெரிவு செய்வதற்கான ஆரம்ப வைத்திய பரிசோதனை.

இடம்: மானிப்பாய் கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலை

காலம்: 10 – 03 – 1995 (வெள்ளி) காலை 7-30 மணி

கற்றறக் (Cataract) எனப்படும் கண்ணில் பூப்படலம் வளர்ந்துள்ள 55 வயதிற்கு மேற்பட்ட நோயாளர்கள் 08 - 03 – 1995 புதன்கிழமை 3-00 மணியளவில் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் தங்களைப் பதிவு செய்து கொள்ளவும். ஏறகனவே கழக அங்கத்தவர்களுடனும், சனசமூக நிலையங்களுடனும் பதிவு செய்தவர்கள் மீண்டும் பதிவு செய்யத் தேவையில்லை.

செயலர்,
மானிப்பாய் கோவில் பற்று,
லயன்ஸ் கழகம்.

விளம்பர அன்பளிப்பு:

**நலன் விரும்பி**
மானிப்பாய்.

[8370]

---

உ
ஓம்சக்தி
சங்கரத்தை

## பத்திரகாளி அம்பாள் ஆலயம்

வட்டுக்கோட்டை

## மஹோற்சவ விஞ்ஞாபனம் - 95

| | | |
|---|---|---|
| கொடியேற்றம் | 8–3–95 | புதன்கிழமை |
| சப்பறம் | 16–3–95 | வியாழக்கிழமை |
| தேர் | 17–3–95 | வெள்ளிக்கிழமை |
| தீர்த்தம் | 18 3–95 | சனிக்கிழமை |

தெய்வீகப் பேருரைகள்:
தினமும் இரவு 7-30 – 8-30 வரை
சிவத்தமிழ் வித்தகர்
**சிவ. மகாலிங்கம் B. A.**
(ஆசிரிய கலாசாலை, பலாலி)
அவர்களால் நிகழ்த்தப்பெறும்.

அடியார்கள் அம்பிகை அருள் பெற்றுய்க!

இங்ஙனம்:
ஆலய பரிபாலகர்

(சி-720)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு: 03 – 12 – 1907



உதிர்வு: 05 – 02 – 1995

## திருமதி பூரணம் நவரட்ணம்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"

அன்பான எங்கள் அம்மா! நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்தாலும் என்றும் தெய்வமாய் இருந்து வழிகாட்டி நடத்துவீர்களாக! அம்மா உங்கள் ஆசீர்வாதம் எம்மை வாழவைக்கும்.

எமது அன்புத் தாயின் மரணச்செய்தியைக் கேட்டு ஓடோடி வந்து உடன் உதவியவர்க்கும் ஈமக்கிரியைகளிலும், எமது துயரத்திலும் பங்கெடுத்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு, இன்று (7 – 3 – 95) செவ்வாய் எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி, வீட்டுக்கிரியையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். அன்னாரின் ஆத்ம சாந்திக்கு இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மகள்: திருமதி சிவகுமாரதாசன் அம்பிகா
மகன்: ந. யோகசுந்தரம்
மகன்: ந. தலைவீரசிங்கம்

புகையிரத வீதி,
கொக்குவில் கிழக்கு [35476]

---

## பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன் கோயில்

மட்டுவில் வடக்கு பன்றித்தலைச்சிக் கண்ணகை அம்மன் கோயில் பங்குனித்திங்கள் திருவிழா 20-03-95 இல் ஆரம்பமாகிறது. மேற்படி கோயில் தினங்களில் கடைகள் வைப்பதற்கு 12-03-95 ஞாயிறு பிற்பகல் 3மணி தொடக்கம் இடம் கொடுக்கப்படும் பணம் முழுவதும் உடன் கட்டி பற்றுசீட்டு பெற்றுக்கொள்ளவும்.

இங்ஙனம்:
தர்மபரிபாலன சபை.

(35537)

---

உ
ஆனைக்கோட்டை நாலுகால்மடம்

## அருள்மிகு ஞானவைரவர் சுவாமி திருக்கோயில்

## வருடாந்த அலங்கார உற்சவ

# விஞ்ஞாபனம்

**வைரவப் பெருமான் அடியார்களே!**

வண். வடமேற்கு ஆனையூர்ப் பதியில் மருத மரத்தின் கீழ் வீற்றிருந்து எல்லோரும் இனிதே வாழ அருள் பாலித்துக் கொண்டிருக்கும் ஞான வைரவ சுவாமிப் பெருமானுக்கு,

ஸ்வத்தி ஸ்ரீ நிகழும் மங்கள கரமான பவ வருடம் மாசித் திங்கள் 23ஆம் நாள் (07 – 03 – 1995) செவ்வாய்க்கிழமை தொடக்கம் அலங்கார உற்சவம் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெற்று 11ஆம் நாள் 17 – 03 – 1995 வெள்ளிக்கிழமை காலை சங்காபிஷேகம் திருவூஞ்சல் நடைபெற்று பகல் 12-00 மணியளவில் "மகேசுர பூஜை" எனப்படும் அன்னதானமும் நிகழ திருவருள் கைகூட்டி இருப்பதால் அன்பர்கள், அடியார்கள் யாவரும் மேற்படி உற்ஸவ காலங்களில் வருகை தந்து, எம் பெருமானைத் தரிசித்து அனுக்கிரகம் பெற்றேகுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

### உற்சவ கால பூஜை ஒழுங்குகள்

07 – 03 – 1995 முதல் 16 – 03 – 1995 வரையும்

நிகழும் மாலை

6 30 மணிக்கு கும்ப பூஜை

7-30 மணிக்கு தெய்வீக தொடர் சொற்பொழிவு

8-30 மணிக்கு வசந்த மண்டப பூஜை தொடர்ந்து வீதி வலம் வருதல்

9-30 மணிக்கு திருவருட் பிரசாதம் வழங்கல்

7 30 மணி – 8-30 மணி வரை

## இராமாயணத் தொடர் பேருரை

நிகழ்த்துபவர்
"வாகீச கலாநிதி"
கனகசபாபதி நாகேஸ்வரன் (எம். ஏ.)

விளம்பர அன்பளிப்பு

★ அல்டி ★
269/1, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

[சி-606]

---

## 10 ஆம் ஆண்டு நினைவுகளில்...



## திருமதி ஜீ. தயாவதி

மலர்வு: 13 – 07 – 1960

உதிர்வு: 25 – 02 – 1985

**திதி: 07 - 03 - 1995**

ஐயிரண்டு ஆண்டுகள் விரைந்து ஓடினும்
அன்றலர்ந்த தாமரையாய் உம்முகம் எம்மனதில்
குன்றாது பொலிவாய் ஒளிர்வாய் பொன்றாது
இன்றும் நிற்கிறது நினைவு நிலைக்கிறது
எம்முள் எமக்குள் எல்லாமாய் நீங்கள்
இந்தமண்ணும் சடல்வானும் வாழும் நாள்வரையில்.

பிரிவு நிழலில் வாழும்;
மகன், பெற்றோர், பெரிய தந்தை
சகோதரர்கள், மைத்துனர்கள்.

இராஜேஸ்வரி வீதி,
அரியாலை. [35526]

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்: 30 – 11 – 1923



மறைவு: 05 – 02 – 1995

திருமதி

## வள்ளியம்மை வைத்தீஸ்வரன்

(இளைப்பாறிய ஆசிரியை)

தந்தைக்குத் தந்தையாகவும், தாய்க்குத் தாயாகவும் சகோதரர்களின் உதவியுடன் எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய் திகழ்ந்து, எம்மை பண்போடும், அறிவோடும், பாசத்தோடும் வழிநடத்திய அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திகின்றோம்.

அன்னாரின் மரணச்செய்தி கேட்டு எமது கவலையில் பங்கு கொண்ட உற்றார், உறவினர், நண்பர்களுக்கு மனங்கனிந்த நன்றியைத் தெரிவிப்பதுடன் இன்று நடைபெறும் வீட்டுக் கிருத்திய நிகழ்ச்சியில் கலந்து, மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

பிரிவால் துயருறும்:
சகோதரன், மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

க. குலசேகரம்,
கிராம அலுவலர்,
சத்துாரி வீதி,
வட்டுக்கோட்டை. (35515)

---

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 13 – 07 – 1920



உதிர்வு: 16 – 02 – 1994

அமரர்

## வேலுப்பிள்ளை பொன்னுத்துரை

[இளைப்பாறிய சிமெந்து கூட்டுத்தாபன உத்தியோகத்தர்]

**திதி 07 – 03 – 1995**

பெற்றெடுத்துப் பெயரிட்டுப் பேணிக் காத்துப் பிரியமுடன் எமை வளர்த்த எம் அப்பாவே! நீங்கள் முற்றியது கடமை என்றோ ஓடிச் சென்றீர்கள்! முழுப் பணியும் இன்னும் தான் ஓயவில்லை அப்பா! ஆண்டு ஒன்று ஓடி மறைந்தாலும் ஆறிடுமோ அப்பா! எம் இதயம் மீண்டும் வரும் நினைவலையாய் உருகி அழும் எம் உள்ளம் எந்நாளும் உங்களையே எண்ணுதப்பா! இரும்பாக்கி எம் மனதை இருக்க நினைந்தாலும் கரும்பான உங்கள் அன்பு நினைவுகளே கண்முன்னே நிழலாடுதப்பா! நீங்கள் நடமாடிய வீட்டில் இன்று படமாகி விட்டீர்கள் அப்பா!

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்!

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,

"லக்சுமி வாசா"
சுதுமலை மத்தி,
மானிப்பாய். [35504]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2 நாவலர் வீதி
யாழ்ப்பாணம்

## தட்டிக்கழிக்கும் போக்கு ஏன்?

விடுதலைப் புலிகளிடம் உள்ள போர்க் கைதிகள் பதினாறு பேரும், தம்மை விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்கத்திடம் கோரி, உண்ணாவிரதம் இருக்கத் தொடங்கி நேற்றுடன் ஆறு நாள்கள் கழிந்துவிட்டன.

நீராகாரம் மட்டுமே அருந்திவரும் அவர்களின் உடல்நிலை, மிகவும் மோசம் அடைந்திருப்பதாக மருத்துவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

போர்க் கைதிகள் உண்ணாவிரதம் இருக்கும் தகவல் இதுவரை அரசாங்கத்துக்கு எட்டியிருக்கும். கொழும்பில் உள்ள பத்திரிகைகளிலும் உண்ணாவிரதம் பற்றிய செய்திகள் வெளிவந்தன.

ஆனால் நேற்று வரையில் போர் கைதிகள் விடயத்தில் அரசாங்கம் எவ்வித அக்கறையும் காட்டியதாக இல்லை. தனக்கு உண்ணாவிரதம் குறித்து எதுவுமே தெரியாது என்ற தோரணையில் நடந்து கொள்கிறது.

இது விடயத்தில் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் ஓரளவு பரவாயில்லை என்று சொல்லலாம். அந்த அரசு பதவியில் இருந்த வேளை, போர்க் கைதிகள் உண்ணாவிரதம் இருந்தபோது, அதனை நிறுத்துவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டதாக வேனும் அது காட்டிக் கொண்டது. இந்த அரசோ இவ் விவகாரத்தை மெதுவாகத் தட்டிக் கழித்துவிட எத்தனிக்கிறது.

உண்ணாவிரதம் இருக்கும் போர்க் கைதிகள் கடந்த ஐந்து வருட காலமாகத் தமது அன்புக்குரிய பெற்றோர்கள், குடும்பத்தினர், உறவினர்களைப் பிரிந்து தவித்து வாழ்கிறார்கள். இதனால் அவர்களுக்கு ஏற்பட்டுள்ள மனத் தாக்கத்தை எழுத்தில் வடிக்க இயலாது.

சிங்கள மக்களையும் மிகக் குறிப்பாக அரசாங்கத்தையும் பொறுத்த வரையில், இவர்கள் தமது நாட்டின் சுதந்திரத்தையும், இறைமையையும் காப்பதற்காகப் போராடியவர்கள். பொதுவாக நோக்கின் தமது நாட்டிற்காகத் தமக்குரிய கடமையைச் செய்தவர்கள். அவர்களை மீட்டெடுப்பது முழுக்க முழுக்க அரசாங்கத்தினுடைய பொறுப்பே!

தென்னிலங்கை அரசியல் வாதிகளும், படை உயர் அதிகாரிகளும் தங்கள் நோக்கங்களையும், நலன்களையும் பேணுவதற்காக இவர்கள் பலிகடாக்கள் ஆக்கப்பட்டவர்கள். தமது குடும்பங்களைக் காப்பாற்றுவதற்காக வருமானம் கருதிப் படைகளில் சேர்ந்தவர்கள். தமக்கு இப்படி ஒரு கதி வரும் அல்லது அனுபவம் உண்டாகும் என்று இவர்கள் கனவிலும் கருதி இருக்கமாட்டார்கள்.

தமது சொந்த இடங்களுக்குத் திரும்பி குடும்பங்களுடன் இணைந்து வாழ்வதற்காக இவர்கள் உண்ணா விரதம் அனுஷ்டிப்பது ஒரு மனித நேய விவகாரமாகும்.

புதிய அரசு இது விடயத்தில் கவனம் செலுத்தாமல் தட்டிக்கழிக்க முயற்சித்தால் அதன் விளைவுகளை தானே எதிர்கொள்ள நேரிடும். சமாதானத்திலும், அமைதியிலும், மக்களின் உரிமைகளை வழங்குவதிலும் அக்கறை உள்ளதாகக் காட்டிக் கொள்ளும் அரசு, போர்க் கைதிகளின் உயிரைக் காப்பாற்றும் விடயத்தில், அவர்களை மீட்கும் விடயத்தில் புறம்போக்காக நடந்து கொள்வது புத்திசாலித்தனமல்ல.

உண்ணா விரதம் இருக்கும் போர்க் கைதிகளை விடுவிப்பதற்கு, விடுதலைப் புலிகள் அரசிடம் ஒரு கோரிக்கைகளை முன் வைப்பர். அதுவே பொதுவான நடைமுறை. அவர்கள் முன்வைக்கக் கூடிய கோரிக்கையை — நிபந்தனையை — வழங்குவது இப்போதைய சூழ்நிலையில் தனக்குப் பாதகமாகி விடலாம் என்று நினைத்தே அரசு இது விடயத்தைத் தட்டிக்கழித்து விட முனைகிறது.

சிங்கள மக்களுக்காகப் போராடிய போர்க் கைதிகளை, தனது அரசியல் லாபம் கருதி புறக்கணிக்கும் அரசு தமிழர் நலனில் அக்கறை கொள்ளும் என்று எதிர்பார்ப்பது எப்படி?

# சமாதானப் பேச்சுவார்த்தை இன்னும் முறிவடையவில்லை

## திருமலையில் சந்திரிகா தகவல்

கொழும்பு, மார்ச் 7

விடுதலைப் புலிகளுக்கும், அரசுக்கும் இடையேயான சமாதான பேச்சுவார்த்தை முறிவடையவில்லை.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முன்கண்டவாறு தெரிவித்தார்.

திருகோணமலையில் கப்பல் துறை மாதிரிக் கிராமத்தை நேற்று முன்தினம் திறந்து வைத்துப் பேசுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் சொன்னதாவது:

அரசியல் தீர்வு பற்றிய பேச்சுக்களை ஆரம்பிப்பது குறித்து விடுதலைப்புலிகளின் சாதகமற்ற போக்குக்கு மத்தியிலும் சமாதான முயற்சி முறிவடையவில்லை.

யாழ்ப்பாணத்தில் புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு வேலைகளை மேற்கொள்வதற்கு விடுதலைப் புலிகள் அனுமதிக்கவில்லை. சமாதானப் பேச்சுக்கள் நடந்து கொண்டிருக்கும் வேளையில் புனரமைப்பு மற்றும் புனர்வாழ்வு வேலைகளை மேற்கொள்ள அரசு முன்வந்தும் அது பலனளிக்கவில்லை.

பாதுகாப்புப் பிரதி அமைச்சர் கேணல் ரத்வத்தை அங்கு சொன்னதாவது:-

சமாதானத் தீர்வு காணுவதில் அரசாங்கம் உறுதியாக உள்ளது என்பதை மீண்டும் வலியுறுத்துகின்றேன்.

சமாதானப் பேச்சுகள் நடந்து கொண்டிருந்த சமயம் பாதுகாப்புப் படையினரை முன்னைய அரசு காட்டிக் கொடுத்தது. இத்தவறை இந்த அரசு ஒருபோதும் மீண்டும் விடாது''

(ஒ-எ-3)

## திருமலை மாதிரிகிராம திறப்பு விழா:

## $3\frac{1}{2}$ மணி நேரம் தாமதமாக சென்றார் சந்திரிகா!

கொழும்பு, மார்ச் 7

நேற்று முன்தினம் திருகோணமலை மாவட்டத்தில் கப்பல்துறை மாதிரிக் கிராமத் திறப்பு விழாவுக்கு ஜனாதிபதி மூன்றரை மணித்தியாலங்கள் தாமதமாகவே சென்றார்.

பாதுகாப்புக் காரணங்களுக்காக அவர் தாமதித்துச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-எ-3)

## 'லக்பிம' பத்திரிகை மீது

## ரூ. 5 கோடி நட்டஈடு கோரி அமைச்சர் வழக்கு தாக்கல்

கொழும்பு, மார்ச். 7

அமைச்சர் சி. வி. குணரத்தின 'லக்பிம' வாரப்பத்திரிகை மீது 5 கோடி ரூபா நட்டஈடு கோரி மானநட்ட வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

அப் பத்திரிகையில் வெளியான கார்ட்டூன் தொடர்பாகவே இம்மான நட்ட வழக்கைத் தாக்கல் செய்யும்படி அமைச்சர் குணரத்தின தமது சட்டத்தரணிக்கு உத்தரவிட்டுள்ளார். [ஒ-எ-3]

## குமணவில் தபால் பொதிகள்

யாழ்ப்பாணம், மார்ச் 7

நேற்றுப் பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்த 'குமண' கப்பலில் 291 தபால் பொதிகள் எடுத்துவரப்பட்டுள்ளன.

அவை இன்று கப்பலில் இருந்து இறக்கப்பட்டு நாளை புதன்கிழமை முதல் விநியோகிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-4)

## ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 7

இன்று வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவிருந்த — இலங்கை கல்வி நிர்வாக சேவை வகுப்பு -3, போட்டிப் பரீட்சைக்கான பயிற்சி வகுப்பு — ஒத்திவைக்கப்பட்டு நாளை பிற்பகல் 3 மணி முதல் தொடர்ந்து நடத்தப்படும் என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் தெரிவித்துள்ளார். [உ]

# காணாமற்போன இரத்தினக்கல் குறித்து மேலும் தகவல்கள்

கொழும்பு, மார்ச். 7

ஜனாதிபதி மாளிகையில் இருந்து விலைமதிப்பற்ற இரத்தினக்கல் காணாமல் போனது குறித்து முக்கிய தகவல்கள் கிடைத்துள்ளதாக விசாரணை நடத்தி வரும் இரகசியப் பொலீஸார் தெரிவிக்கின்றனர்.

கடந்த 26ஆம் திகதி இந்த விலைமதிப்பற்ற இரத்தினக்கல் காணாமல் போய்விட்டது எனத் தெரிந்தவுடன் சமய கலாசார அமைச்சர் லக்ஸ்மன் ஜெயக்கொடி அரச புள்ளிவிவரத்திணைக்களத்திடம் அறிக்கை ஒன்றைப் பெற்று கடந்த முதலாம் திகதி நாடாளுமன்றத்தில் அதனைச் சமர்ப்பித்தார்.

ஜனாதிபதி மாளிகையில் இருந்த இந்த விலைமதிப்பற்ற இரத்தினக்கல் பின்னர் அப்போதைய ஜனாதிபதியின் மனைவியான ஹேமா பிறேமதாஸாவின் படுக்கை அறைக்கு அருகே புத்தர் சிலை வைக்கப்பட்டுள்ள இடத்திற்கு கொண்டு செல்லப்பட்டதாக நம்பத்தகுந்த சாட்சியம் விசாரணைக் குழுவுக்கு கிடைத்துள்ளது.

வெளிநாட்டிலும் உள்நாட்டிலும் விலைமதிக்க முடியாத இந்த இரத்தினக்கல் புத்தர் சிலைக்கு அருகே முத்திரையிடப்பட்ட கண்ணாடிப் பெட்டியில் வைக்கப்பட்டிருந்தது (க-4)

# படைகளுக்குள் ஊடுருவ ஜே.வி.பியினர் திட்டமாம்

## பேரினவாதப் போக்குஅதன் அணுகுமுறை

கொழும்பு, மார்ச் 7

ஆயுதபடையினர், தொழிற் சங்கங்கள், மாணவர் அமைப்புக்கள் மற்றும் அரசியல் கட்சிகளுக்குள் ஊடுருவல் செய்யும் ஜே.வி.பியினரின் பிந்திய திட்டங்கள் குறித்த சாட்சியங்களை பொலீஸார் திரட்டி அரசுக்குச் சமர்ப்பித்துள்ளனர்.

'சண்டே ரைம்ஸின்' பாதுகாப்புச் செய்தியாளர் இத்தகவலை வெளியிட்டுள்ளார்.

ஜே.வி.பி. அச்சுறுத்தலும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் அணுகுமுறையும் என்ற தலைப்பிலான கட்டுரையில் இத்தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த மாதம் ஜே.வி.பி. மீண்டும் புத்துயிர் பெறும் தெளிவான அறிகுறிகள் தென்பட்டன. சுவரொட்டிகள் காணப்பட்டன. உறுப்பினர்களுக்கான நான்கு விரிவுரைகள் திட்டம் அமுல் நடத்தப்பட்டு வருகிறது. ஆட்திரட்டல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இன்றைய அரசு விரும்புகிறதோ, இல்லையோ தனது திட்டத்தை அமுல் நடத்துவதில் ஜே.வி.பி. தடையின்றிச் செல்கிறது.

மறைந்த தலைவர் ரோஹண விஜேவீராவின் இலட்சியங்களை முன்னெடுத்துச் செல்லப்போவதாக ஜே.வி.பி. பிரதிக்ஞை எடுத்துள்ளது.

1970, 1980 தீவிரவாதக் கிளர்ச்சிகளின் போது உயிர் தப்பிய ஜே.வி.பி.உறுப்பினர் ஒருவர், ''புதிய அரசு மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை. இன்னும் சில மாதங்கள் இந்த அரசுக்கு கால அவகாசம் வழங்குவோம். அதன் பின்னர் எமது போராட்டத்தை ஆரம்பிப்போம்'' —என்றார்.

ஜே.வி.பியின் தற்போதைய உத்தி, தந்திரோபாயங்கள் 1971, 87 களில் அவர்கள் கடைப்பிடித்த முறைக்கு வித்தியாசமாக இல்லை.

ஜே.வி.பியின் சிந்தனை பேரினவாத போக்குடையது என்பதைக் கருத்திற்கொண்ட படையினரும், புலனாய்வுத் துறையினரும் —

இனப்பிரச்சினையை முன் வைத்தே புதிய அரசுக்கு எதிராக ஜே.வி.பி.சண்டையிடும் என்று நம்புகின்றனர்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வாக தமிழருக்குளதைத்தான் அரசு வழங்கினாலும் அதனை ஜே.வி.பி. கண்டிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஏற்கனவே குமாரதுங்க அரசாங்கம் நாட்டைப் பிரிக்கத் திட்டமிட்டுள்ளதாக தங்களின் சகாக்கள் மத்தியில் பிரசாரத்தை ஜே.வி.பி. மாணவர் தலைவர்கள் ஆரம்பித்து விட்டனர்.

— இவ்வாறு அந்தக் கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-எ)

# பூநகரி முகாம் அகற்றப்பட்டால் இராணுவம் 'கிளர்ச்சி செய்யுமாம்

## 'திரிசூல' சிங்கள இதழ் தகவல்

கொழும்பு, மார்ச். 7

பூநகரி இராணுவ முகாம் அகற்றப்படவேண்டும் என்ற விடுதலைப் புலிகளின் கோரிக்கைக்கு அரசு இணங்குமானால் வடக்கில் பணி புரியும் மூன்று கட்டளைத் தளபதிகள் ராஜினாமாச் செய்வர் என்றும் —

அரசின் சமாதான முயற்சி குறித்து விரக்தி அடைந்துள்ள வடபகுதி இராணுவத்தினரில் நாட்டுப்பற்றுள்ளவர்கள் அரசுக்கு எதிராக கிளர்ச்சி செய்ய தயாராய் உள்ளனர் என்றும் அரசுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டிருப்பதாக ''திரிசூல'' சிங்களப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

நாடு துண்டாடப்படுவதற்கு எதிராகவும், சிங்கள இனத்தின் தனித்துவத்தைப் பேணிக் காப்பதை நோக்கமாகக் கொண்டதுமான இந்த இராணுவக் கிளர்ச்சி அரசைக் கவிழ்க்கும் நோக்கம் கொண்டதாக இருக்காது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரபாகரன் மீதும், விடுதலைப் புலிகள் மீதும் அரசு காட்டும் அனுதாபம் காரணமாக வடக்கில் உள்ள முப்படைகளைச் சேர்ந்த நாட்டுப்பற்றுள்ள சிப்பாய்களும், ஏனைய அதிகாரிகளும் அரசு மீது கடும் விரக்தி அடைந்துள்ளனர் என்றும் —

பிரபாகரன் மீது காட்டப்படும் அனுதாபம் ஒரு பூகம்பமாக மாறும் என அவர்கள் உணர்வதாகவும் —

இராணுவத்தில் உள்ள நாட்டுப்பற்றாளர்களின் கைகளில் இருக்கும் துப்பாக்கிகளில் ரவைகள் இல்லை என அரசு கருதுமாயின் அது வாலைப் பிடித்து சீண்டுவதற்கு ஒப்பானதாகும் என்றும் 'திரிசூல' செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-10)

## வெளிநாட்டு..

(1 ஆம் க்கத் தொடர்ச்சி)

— இவ்வாறு நேற்று தெரிவித்தார் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர் மேலும் கூறியதாவது;-

இன்றைய சூழ்நிலையில் நேரடியாக பேச்சு நடப்பதையே விரும்புகிறோம்.

நாம் அரசுக்கு எழுதும் கடிதங்களில் பேச்சை விரைவாக ஆரம்பிக்கும் படியே கோருகின்றோம். நாம் எழுப்பிய பிரச்சினைக்குத் தீர்வு காணுமாறு கேட்டு வருகிறோம்.

நாம்தான் பேச்சை விரும்பவில்லை என்றோ —

அல்லது பேச்சை ஒத்திப் போடுகின்றோம் என்றோ எம்மீது அரசு பழிபோட முடியாது.

அரசு எப்போது வந்தாலும் நாம் பேசத் தயாராக இருக்கிறோம்.

ஆனால் அரசு இன்றும் முடிவு செய்யவில்லை; குறுக்கு வழியை நாடப்பார்க்கிறது.

இரகசியமாக இந்தக் கடிதத்தை எழுதி விட்டு பின்னர் பகிரங்கபடுத்திய அவர்களோடு எப்படி முக்கிய விடையங்களை பேசமுடியும்?

பகிரங்கமாகக் பேசுவது அவர்களுக்கு சங்கடமாக இருக்கலாம்.

கண்காணிப்புக் குழு பற்றி அரசு இன்றும் ஒருமுடிவு எடுக்கவில்லை குழுவினர் கொழும்பில் காத்துக் கிடக்கிறார்கள்.

பெரிய அளவில் புனர்வாழ்வுப்பணி மேற்கொள்ளத்தக்க சூழ்நிலை உருவாக வேண்டும் என்று நாம் விரும்புகிறோம்.

அப்படியில்லாமல் அவசரப்பட்டு சில வேலைகளைத் தொடக்க அரசு முயற்சிக்கிறது.

பாவித்த 2 ஜெனரேட்டர்களை அனுப்பியுள்ளனர். அதை இயக்க பெருமளவு டீஸல் தேவை. எரிபொருள் தடையை வைத்துக்கொண்டு ஜெனரேட்டரை இங்கு அனுப்பிவிட்டு மின்சாரம் வழங்கப்பட்டுவிட்டதாக பிரசாரம் செய்கிறது அரசு.

— என்றார். (உ-3)

## பாடசாலைகள்—

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வலயம் ஒன்றின் அலுவலகத்தில் அஞ்சலிக்கா வைக்கப்படும் என்றும்—

யாழ். மாவட்டத்தில் உள்ள சகல பாடசாலைகளையும், கல்வி அலுவலங்களையும் இன்று நண்பகல் 12 மணிக்கு மூடி, அதிபர், ஆசிரியர், மாணவர்கள் மற்றும் அலுவலக ஊழியர்களை கல்வித் திணைக்களத்திற்கு வந்து அன்னாருக்கு அஞ்சலி செலுத்துமாறும் —

கல்வி வலயங்கள் இரண்டினதும் கல்விப் பணிப்பாளர்கள் கேட்டுள்ளனர்.

## யாழ்.—

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

விடுத்துள்ளது.

பேரணியில் பங்குபற்றுவோர் வசதி கருதி வடமராட்சி, தென்மராட்சி மற்றும் வலிகாமம் பகுதிகளில் விசேடமான ஒழுங்குகள் செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# யுத்தம் முடிவுக்கு வரவேண்டும் இதுவே மக்கள் பிரார்த்தனை

## தீர்வுகிட்டாவிடில் எஞ்சுவது அங்கவீனமான மக்கள் - அழிவுற்ற நாடு

26-2-95 ஞாயிறு 'லங்காதீப' பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கத்தின் தமிழாக்கம் கீழே தரப்பபட்டுள்ளது.

யுத்தத்தில் வெற்றியோ அல்லது தோல்வியோ கிடைப்பதில்லை என்பது முதுமொழி.

யுத்தத்தில் எஞ்சுவது அங்கவீனமான மக்களும் அழிவுற்ற நாடும் மாத்திரமே.

எனவே யுத்தமொன்றினால் உண்மையில் கிடைப்பது தோல்வியே.

### யுத்தத்துக்கு எப்படி முடிவு காணலாம்

கடந்த 12 ஆண்டுகளாக நாங்கள் யுத்தத்துக்கு முகம் கொடுத்து வந்துள்ளோம்.

இதனால் இந்நாட்டின் நற்பெயர், செல்வம், உயிர்கள் ஆகியவற்றை நாம் இழந்துள்ளோம்.

மேலும் இந்த யுத்தத்தினால் உளரீதியாகப் பாதிக்கப்பட்ட மக்களை மீட்டெடுக்க இன்னும் எத்தனை பரம்பரை வரை காத்திருக்க வேண்டுமோ தெரியாது.

எனவே யுத்தத்தில் உண்மையில் வெற்றி பெற்றவர்கள் யார்? இந்த யுத்தத்துக்கு எவ்வாறு முடிவைக் காணலாம்? எனச் சிந்திப்பது முக்கியமானதாகும்.

இதுபற்றிச் சிந்திக்கையில், அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த மக்கள் பிரதிநிதிகள், பத்திரிகையாளர்களுடன் விடுதலைப் புலிகளின் தலைவர்கள் மேற்கொண்ட பேச்சுவார்த்தைகளின்போது முன் வைத்த காரணங்களை கவனத்தில் கொள்ளாமல் ஒதுக்கிவிட முடியாது.

விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் ஒரு சந்தர்ப்பத்தில் தென்பகுதி அரசியல் தலைவர்களின் படுகொலைகள் பற்றி வெளியிட்ட கருத்து முக்கியமான ஒன்றாகும்.

அவர் தனது கருத்தில் இப்படுகொலைகளுக்குக் பொறுப்பானவர்களைக் கண்டறிவதற்குப் பதிலாக இப்படுகொலைகளுக்கான காரணங்களைக் கண்டறிவது முக்கியம் எனக் கூறியிருந்தார்.

அத்துடன் சந்திரிகாவின் கைகள் இரத்தம் தோயாத கைகளாயிருப்பதால் அஞ்சுவதற்கு காரணம் எதுவும் இல்லை எனவும் தெரிவித்திருந்தார்.

அவர் மற்றுமொரு முக்கியமான விடயத்தையும் குறிப்பிட்டிருந்தார். சமாதானப் பேச்சுவார்த்தை மேற்கொள்ள வரும் அரச தரப்புப் பிரதிநிதிகளுடன் எந்தவொரு விடயத்திலும் இறுதித் தீர்மானமெடுக்க முடியாமல் உள்ளது என்பதே அவர் தெரிவித்த விடயமாகும்.

இவ்வாறான பின்னணிகளில் நாங்கள் பல்வேறு அடிப்படைப் பிரச்சினைகள் குறித்துக் கவனம் செலுத்த வேண்டும். இதில் முக்கியமானது தேசியத் தலைவர்களினதும் மக்களினதும் உயிருக்குப் பாதுகாப்பளித்து சமாதானத்தை உருவாக்குவது என்பது பற்றியதாகும்.

எந்த அடிப்படையில் சமாதானத்தை உருவாக்கலாம்? அவ்வாறு உருவாக்கும் சமாதானத்தை நிரந்தர சமாதானமாக எவ்வாறு பேணுவது? என்பன போன்ற கேள்விகளுக்கு நாங்கள் விடை காண வேண்டும்.

### மக்களின் தூண்டுதல்

இருப்பினும் இதுவரை சமாதானப் பேச்சுவார்த்தையை மேற்கொள்ளப் பொருத்தமான புறச்சூழல் மாத்திரமே உருவாக்கப்பட்டுள்ளது. இந்தப் புறச்சூழல் கூட இரு தரப்பாரின் தேவையின் அடிப்படையில் ஏற்பட்டதல்ல. மக்களின் தூண்டுதலாலேயே உருவாக்கப்பட்ட ஒன்றாகும்.

சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் யுத்தத்துக்கு எதிரான கருத்தினைக் கொண்டுள்ளனர். நிலைமை இவ்வாறு இருந்தபோதிலும் சமாதானம் என்பது வெறும் அபிலாஷை என்ற அளவில் மாத்திரமே உள்ளது. அந்தக் கனவை நிறைவேற்றக்கூடிய சமாதான மார்க்கங்களைத் தோற்றுவிக்க முடியாதுள்ளது என்பது இரகசியமன்று.

### கதவு இன்னும் மூடப்படவில்லை

எவ்வாறாயினும் இவ்வாறான இடையூறுகள் இருந்த போதிலும் இன்னும் சமாதானத்துக்கான கதவு மூடப்படவில்லை என்பது தெளிவு.

சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் [illegible] அளவிலான எதிர்பார்ப்புகளு [illegible]

குறிப்பாக வடக்கு - கிழக்குப் பிரதேசங்களில் வாழும் மக்கள் — யுத்தத்தினால் பல்வேறு துன்பங்களை அனுபவித்த மக்கள் எப்போதும் சமாதானத்தையே அவர்கள் விரும்புவர். அம்மக்களின் நோக்கங்களுக்கு எதிராக எந்த அமைப்பினாலும் யுத்தத்தை இறுதிவரை நடத்த முடியுமாஎன்பது சந்தேகமே.

கடந்த காலங்களில் யுத்தம் காரணமாக நாடு இழந்துள்ள தேசியத் தலைவர்கள், கல்விமான்கள், புத்திஜீவிகள், இராணுவத் தலைவர்கள் பொதுமக்கள் எத்தனைபேர்? அவர்களுக்கு அவ்வாறான முடிவு ஏற்படக் காரணம் என்ன? அவர்களது கைகள் இரத்தம் தோய்ந்திருந்தனவா? இவை ஆராயப்பட வேண்டிய விடயங்களாகும்.

அவ்வாறே மனித உரிமைகள் தொடர்பான அமைப்புகள் இவ்வாறான சூழ்நிலையில் மௌனம் சாதிப்பது பற்றியும் சிறிது கவனம் செலுத்த வேண்டும்.

### 17பேரில் ஒருவர் அகதி

இந்த யுத்தம் காரணமாக இந்நாட்டின் சனத்தொகையில் ஒவ்வொரு 17 பேரில் ஒருவர் இடம்பெயர்ந்துள்ளார். அதேபோல் நிமிடமொன்றுக்கு யுத்தத்துக்காக 48 ஆயிரம் ரூபாவைச் செலவிட நேரிடுகிறது.

வடக்கு - கிழக்குப் பிரதேசங்களில், இடம்பெயராத மக்கள்கூட உண்மையில் இன்று இடம்பெயர்ந்தோரின் நிலையிலேயே வாழ்ந்து வருகின்றனர்.

மறுபுறத்தில் அப்பிரதேசத்தில் பொருளாதாரச் செயற்பாடுகளும் மனிதத் தேவைகளும் பூரணமாக ஸ்தம்பித்துள்ளன. இவ்வாறான நிலைமைகள் அப்படியே தொடர்ந்திருக்க யுத்தத்தின் முடிவு என்னவாக அமையும்?

யுத்தத்தின் முடிவைக் காணவேண்டும் என்பதே மக்களின் பிரார்த்தனை ஆகும். சமாதானத்தை உருவாக்குவது அரசின் கடமை ஆகும். 12 ஆண்டுகள் இடம்பெற்ற கொடூரமான யுத்தத்தால் யார்தான் பயனடைந்தனர்? உண்மையில் எவருமில்லை. அதிகார ஆசைகொண்ட ஒரு சிலரும் ஒரு சில சந்தர்ப்பவாதிகளுமே இந்த யுத்தத்தினால் பயனடைந்தனர்.

அவ்வாறெனில் இப்படியான சந்தர்ப்பவாத அரசமைப்புகளுக்கு எதிராக மக்கள் கிளர்ந்தெள வேண்டும். அரசு இந்தப் பிரச்சினையை தீர்ப்பதற்கு தீவிர அக்கறை காட்டின், மதிப்பளிக்க வேண்டியது மக்களின் பொதுக் கருத்துக்கேயன்றி குறிப்பிட்ட ஒரு சிலரின் கருத்துகளுக்கல்ல.

எனவே ஜனநாயக எண்ணங் கொண்ட அனைவரும் முதலில் ஒன்றுபட வேண்டும். இன அடிப்படையில் மேற்கொள்ளப்படும் பொருளாதார, சமூக அநீதிகள் களையப்பட வேண்டும். இவற்றின் மூலம் சமாதானமான அரசியல் தீர்வொன்றினைக் காணக் கூடிய கட்டமைப்பை உருவாக்கலாம்.

(இ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளின் குற்றச்சாட்டை மறுத்து அரசு அறிக்கை

## ஏழுபக்கங்களில் ஜனாதிபதி செயலகம் வெளியிட்டது

கொழும்பு, மார்ச் 7

அமைதிப் பேச்சுக்களை அரசு தாமதிக்கின்றது என்ற புலிகளின் குற்றச்சாட்டை வலுவான சொற்கள் அடங்கிய — ஏழு பக்க — அறிக்கை ஒன்றின் மூலம் ஸ்ரீலங்கா அரசு மறுத்திருப்பதாகச் செய்தி ஏஜென்ஸிகள் அறிவித்தன.

இது தொடர்பாக ஜனாதிபதி செயலகம் நேற்று விடுத்த அறிக்கையுடன் ஜனாதிபதி சந்திரிகாவுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரனுக்கும் இடையில் பரிமாறப்பட்ட மூன்று கடிதங்களும் பின் இணைப்பாகச் சேர்க்கப்பட்டிருந்தன.

சந்திரிகா அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் பரிமாறப்பட்ட கடிதங்களை அரசு வெளியிட்டிருப்பது இதுவே முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

அரசு தனது அறிக்கையில் குறிப்பிட்ட முக்கிய அம்சங்கள் வருமாறு:-

அமைதிப் பேச்சுக்கள் தொடர வேண்டும் என்ற தமது ஆலோசனையை அரசு நிராகரித்துள்ளதாகவும், அமைதிப் பேச்சுக்கு அரசு மறுத்துவிட்டது என்றும் திரு. பிரபாகரன் கூறியிருப்பது உண்மைக்கு மாறானது இந்நிலை குறித்து அரசு வருந்துகிறது.

அரசுக்கு அமைதி முயற்சிகளில் ஆழ்ந்த ஈடுபாடு உள்ளது.

அரசியல் பேச்சுக்களைத் தொடங்க காலம் கனியவில்லை என புலிகள் தான் திரும்பத் திரும்பக் கூறும் நிலை உள்ளது.

யாழ்ப்பாணம் வருமாறு அரசுப் பிரதிநிதிகளை புலிகள் அழைப்பது அரசியல் ரீதியான தீர்வு காணும் அமைதிப் பேச்சுக்கு அல்ல. கடலில் கட்டுப்பாடின்றி படகு செலுத்துவது, கிழக்கில் புலிகள் ஆயுதங்களுடன் நடமாடுவது, பூநகரி முகாமை அகற்றுவது போன்ற மற்றைய பிரச்சினைகள் குறித்து விவாதிக்கவே.

இப்போது அமைதிப் பேச்சுக்கள் நின்று போனதற்கு புலிகளே பொறுப்பு.

மோதல் தவிர்ப்பு ஏற்பட்ட பின்னர் புலிகள் பல புதிய நிபந்தனைகளைப் போட்டு வருகிறார்கள்.

அமைதிக் குழுக்களில் இடம் பெறுவதை அவர்கள் தவிர்த்து வருவதால் போர் இடைநிறுத்தத்தை நிரந்தர யுத்த நிறுத்தமாக மாற்றுவது தாமதமாகின்றது.

புனரமைப்புக்களைக் கண்காணிப்பதற்கான செயற்பாட்டுக் குழுவில் புலிகள் அங்கம் பெறுவதை அரசு ஏற்கனவே ஒப்புக் கொண்டு விட்டது.

வடபகுதிக் கடலில் கட்டுப்பாடின்றி படகுகள் சென்று வர அனுமதிக்க வேண்டும்—

மீன் பிடித்தடை முற்றாக நீக்கப்பட வேண்டும் —

கிழக்கில் ஆயுதங்களுடன் புலிகள் போராளிகள் நடமாட அனுமதிக்க வேண்டும் —

என்பது போன்ற நிபந்தனைகளை வெளிநாட்டுப் பிரதிநிதிகள் அவரவர் இடங்களுக்குச் சென்றபின் விதிப்பது வருந்தத் தக்கது.

அமைதியை ஏற்படுத்துவது இலகுவானது என என்றுமே அரசு எண்ணியதில்லை.

இதுவரை இராணுவ அடிப்படையில் மட்டுமே செயற்பட்டு வந்த புலிகள் அமைப்பு எளிதில் அமைதி வழிக்கு திரும்பும் என்றோ —

இராணுவ அடிப்படையிலிருந்து மாறி ஜனநாயக அமைப்பாகிவிடும் என்றோ—

அரசு எண்ணியதில்லை.

கண்ணியமான அமைதியை எட்டுவதற்கு தொடர்ந்தும் அரசு முயற்சிக்கும். — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### கருத்துப---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கூறினால் அவர் அவற்றைத் தன்னிடம் வந்து தெரிவிப்பார் என்றும்—

கருத்துப் பரிமாற்றத்துக்கு இருதரப்புக்கும் பொதுவான தனிநபரை நியமிக்கும் யோசனைக்கு இணங்கினால் இரகசியமான முறையில் கருத்துப் பரிமாற்றம் செய்து கொள்ளலாம் என்றும்—

சந்திரிகா தெரிவித்திருந்தார்.

பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்தவரும், முன்னர் அந்நாட்டின் ஹெய்டி, எதியோப்பிய தூதுவராகப் பணியாற்றியவருமான பிரான்சுவா மிஸேல் என்பவரை பொதுவான நடுவராக நியமிக்கலாம் என சந்திரிகா இக்கடிதத்தில் குறிப்பிட்டார்.

இந்த ராஜதந்திரி சந்திரிகா சார்பில் தலைவர் பிரபாவுடன் தனிப்பட்ட முறையில் பேசுவார் என்றும் இக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

ஆனால் அந்த யோசனையை தலைவர் பிரபாகரன் திட்டவட்டமாக மறுத்துவிட்டார்.

இது தொடர்பாக தலைவர் பிரபா கடந்த 25ஆம் திகதி அனுப்பிய கடிதத்தின் சாராம்சம் வருமாறு:-

உங்களால் நியமிக்கப்பட்ட அதிகாரப்பூர்வ பிரதிநிதிக்கும் எங்களால் நியமிக்கப்பட்ட அதிகாரப்பூர்வ பிரதிநிதிக்கும் இடையே நேரடியாகப் பேச்சு நடப்பதையே நாம் விரும்புகின்றோம்.

எங்கள் பிரதிநிதிகள் எமது கருத்தைக் கூறுவர் உங்கள் பிரதிநிதிகள் உங்கள் கருத்தைக்கூறுவர்.

இந்தப் பேச்சுக்கள் பகிரங்கமான முறையில் நடப்பதையே நாம் விரும்புகின்றோம்.

எமது தேசியப் பிரச்சினை இன்று சர்வதேச மயப்படுத்தப்பட்டுள்ளது. சர்வதேச உலகின் அக்கறைக்கு உட்பட்டுள்ளது. எமது மக்களும் இந்தப் பேச்சுக்களை உன்னிப்பாக அவதானித்து வருகின்றனர்.

எமக்கு மத்தியில் நடைபெறும் பேச்சுக்கள் பகிரங்கமாக இருப்பதையே நாம் விரும்புகின்றோம்.

பேசப்படும் விடயங்கள், அதில் காணப்படும் முன்னேற்றங்கள் எமது மக்களுக்குத் தெரியப்படுத்தப்பட வேண்டும்.

இப்படியான இன்றைய சூழ்நிலையில் உங்களுக்கும் எங்களுக்கும் மத்தியில் கருத்துக்களைக் காவிச்செல்ல ஒரு நடுவரைப் பாவிப்பது உகந்த யோசனையாக எமக்குத் தெரியவில்லை—என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. [உ-3]

### கொழும்பில்---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டு விசாரிக்கப்படுகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு நகரின் முக்கிய நுழைவாயில்களில் கடும் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதால் இத் தற்கொலைப்படையினர் கொழும்புக்கு அருகில் புறநகர்ப் பகுதி ஒன்றில் மறைந்திருப்பதாக 'சண்டே லீடர்' மேலும் தெரிவித்துள்ளது.


## தமிழீழ நிர்வாக சேவை

01. உழவுயந்திரம் வாடகைக்குத் தேவை
உரிமையாளர்கள் தொடர்பு கொள்ளவும்.

02. கொங்கிறிற் கலவை சாதனம்
கொங்கிறிற் மிக்சர் (Concrete Mixer) விலைக்கு வாங்கப்படும். வைத்திருப்பவர்கள் தொடர்பு கொள்ளவும்.

03. சொகுசு பஸ் சேவை
மங்கள வைபவங்கள், சுற்றுலாத் தேவைகள் மற்றும் பயணத் தேவைக்கும் வாடகைக்கு விடப்படும்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

பொறுப்பாளர்,
வேலைப் பகுதி,
தமிழீழ நிர்வாக சேவை,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

(சி 722)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி ஞானசவுந்தரி பத்மநாதன்

வீமன்காமம் தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், தற்போது கோப்பாயை வசிப்பிடமாகவும் கொண்டவருமாகிய திருமதி ஞானசவுந்தரி பத்மநாதன் 4-3-95 அன்று காலமாகி விட்டார்.

இவர் பத்மநாதனின் [ஓய்வு பெற்ற வனபரிபாலன அதிகாரி] அன்பு மனைவியும், சுமதி, [கொழும்பு], பிரேம்குமார் [பொறியியலாளர் - இ. மி. சபை அநுராதபுரம்], கீதா [ஆசிரியை கல்முனை], ரட்ணகுமார் [ஸ்கைலாக் பொறியியலாளர்கள் யாழ்ப்பாணம்], சுகுணா [லிகிதர்-மன்னார் மீன்பிடிக் கூட்டுத்தாபனம்] ஆகியோரின் அன்புத் தாயாரும், துரைசிங்கம், கனகசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் தகனக் கிரியைகள் நாளை [8-3-95] பகல் 10 மணிக்கு கோப்பாய் இந்து மயானத்தில் நடைபெறும்.

தகவல்
P. ரட்ணகுமார்
[மகன்]

கோப்பாய் மத்தி,
[கிறீஸ்தவ கல்லூரி முன்பாக]
[35552]

### இளையதம்பி முருகையா

(முன்னைநாள் தெல்லிப்பழை கிராமசபை பிரதம லிகிதர், தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான உபதலைவர்)

தெல்லிப்பழை, பாலன் அடைப்பைச் சேர்ந்த இ. முருகையா அவர்கள் 5-3-95 ஞாயிற்றுக்கிழமை இரவு சிவபதம் அடைந்து விட்டார்.

இவர் திலகவதியின் அன்புக் கணவரும், உமாதேவி, கலாதேவி, அனுஷாதேவி, மஞ்சுளாதேவி, சித்திரா, வளர்மதி ஆகியோரின் அன்புத் தந்தையாரும், சிதம்பரநாதன், ஸ்கந்தராசா, முருகதாஸ் ஆகியோரின் மாமனாரும், நடராசா, சிவபாதநாயகி, காலஞ்சென்ற கனகசபை, காலஞ்சென்ற செல்வநாயகி, பரமேஸ்வரி, இராஜேஸ்வரி, திருநாவுக்கரசு ஆகியோரின் சகோதரரும், சிந்துபாரதி, மதுவைஷ்ணவி, சேதுசெவ்வேள், மாதுவாசவன், ரஜிசாம்பவி, ராதுசங்கரி, பிறேமிதர்சனி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 8-3-95 புதன்கிழமை பி. ப. 3.00 மணிக்கு மல்லாகம் செல்லத்துரை வீதியில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
மனைவி, மக்கள்

செல்லத்துரை வீதி,
மல்லாகம்
(35544)

### கந்தர் இராசரத்தினம்

ஆனைக்கோட்டை வண்வட மேற்கு குருசு மதவடியைப் பிறப்பிடமாகவும் கலைவாணி வீதி சித்தன்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தர் இராசரத்தினம் (3-3-95) இல் கொழும்பில் காலமானார்.

இவர் அம்பிகாவின் அன்புக் கணவரும், விவி, வேவி, ஜெனித்தா, விஜித்தரன் காலஞ்சென்ற அனுஷாவினதும் அன்புத் தந்தையும் இராசதுரை நாகரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் சின்னத்துரையின் (இளைப்பாறிய ஆசிரியர்) அன்பு மைத்துனரும், சிறீரஞ்சிதம், சிறீ.ரமணி, ஜோதி, ஜெகன், றாஜேஸ், றஞ்சிதம் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 4-3-95 இல் கொழும்பில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
திருமதி. சி. நாகரத்தினம்
குடும்பத்தினர்

பாடசாலை ஒழுங்கை,
வண். வடமேற்கு,
ஆனைக் கோட்டை.
(35549)

### அம்பலவி அருளானந்தம்

(கந்தர்மடம்)

கந்தர்மடம் குமாரசாமி வீதியைச் சேர்ந்த பிரபல புகையிலை வியாபாரியும், சுருட்டு முதலாளியுமாகிய அம்பலவி அருளானந்தம் ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்தம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், பண்டிதர் சண்முகநாதன், விசாலாட்சி, அன்னம்மா, பொன்னம்மா, மற்றும் பாக்கியம், நாகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், தவராஜகுமாரி, சண்முகானந்தம் (ஜேர்மனி) சதானந்தம் (அதிபர் தர்மபுரம் மகா வித்தியாலயம்), நறகுணானந்தம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், சுப்பிரமணியம் (ஆசிரியர் புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி), செல்வமணி (ஜேர்மனி), தேவராணி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 7-3-95 செவ்வாய்க்கிழமை மு. ப. 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க. சுப்பிரமணியம்
(மருமகன்)

இல. 6 குமாரசாமி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.
(35541)

### விஸ்வநாதர் முத்துக்குமாரு

சங்கானை தொட்டிலடியைச் சேர்ந்த விஸ்வநாதர் முத்துக்குமாரு அவர்கள் திங்கள் அன்று காலமானார்.

இவர் திருமதி மு. பார்வதிப்பிள்ளையின் அன்புக் கணவரும், மு. நடராசா (அஞ்சல் அதிபர்- ஹற்றன்), மு. தேவராசா (முகாமையாளர், பனைமேவளர்ச்சி சேவை, சங்கானை), திருமதி ம. ஞானேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி ந. இராஜேஸ்வரி, திருமதி தே. தவபூஷணி, சு. மதியாபரணம் ஆகியோரின் அன்பு மாமனாரும், திருமதி க. இலட்சுமியின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் அவரின் இல்லத்தில் இன்று செவ்வாய்க்கிழமை (7-3-95) காலை 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனத்திற்காக விளாவெளி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திரு. மு. தேவராசா
(மகன்)

தொட்டிலடி
[35557]

## மரண அறிவித்தல்கள்

### இராசா துரைசிங்கம்

உரும்பராய் கிழக்கு, கரந்தன் இராசா துரைசிங்கம் (6-3-95) நேற்று காலமானார்.

இவர் விக்னேஸ்வரியின் அன்புக் கணவரும், திருமதி சரோஜினி பாக்கியராஜ் (கனடா) ரவீந்திரன் (அமெரிக்கன் மிசன் வறணி), சங்கர் (ஜேர்மனி), சேகர் (யாழ் பல்கலைக் கழகம் முகாமைத்துவம் 3ம் வருட மாணவன்), சசிலா ஆகியோரின் அன்புத் தந்தையும், பரமேஸ்வரி, நாகரத்தினம், சிவலிங்கம், தர்மலிங்கம், நாகேஸ்வரி ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற சத்தியநாதன், சற்குருநாதன் திருமதி யோகநாதன், திருமதி பரமானந்தம் ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (7-3-95) அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காலை 10.00மணியளவில் தகனக்கிரியைகளுக்காக உரும்பராய் இளங்காடு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
அ. இ. தர்மலிங்கம்

உரும்பராய் கிழக்கு.
(35543)

### இ. சிவானந்தன்

இ. சிவானந்தன் [பிரதிக் கல்விப் பணிப்பாளர், கல்வித் திணைக்களம் யாழ்ப்பாணம் வலயம் 01] காலமானார்.

இவர் முத்தாச்சியின் அன்புக் கணவரும், செல்வேள (யாழ் இந்துக் கல்லூரி மாணவனும், யாழ் தொழில் நுட்பக் கல்லூரி மாணவனும), சேயாள் (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி உயர்தர வகுப்பு மாணவி), சக்தி (சுண்டுக்குளி மகளிர்கல்லூரி ஆண்டு 11 வகுப்பு மாணவி] ஆகியோரின் அன்புத் தந்தையும், இ. முருகையன் (இளைப்பாறிய சிரேஷ்ட உதவிப் பதிவாளர், யாழ் பல்கலைக்கழகம்), காலஞ்சென்ற திருமதி அ. மகேஸ்வரி, செல்வி இ. கமலாம்பிகை (மொழிபெயர்ப்பாளர், சட்ட வரைஞர் திணைக்களம், கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று செவ்வாய்க்கிழமை (07-03-95) பி. ப. 2 மணிக்கு 65, மணல்தறை ஒழுங்கை திருநெல்வேலியிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்களின் அஞ்சலிக்காக யாழ் கல்வி வலயம் I இல் பி.ப. 2-30 மணி தொடக்கம் 3-30 மணி வரை பூதவுடல் வைக்கப்பட்டு, பின்பு தகனக் கிரியைக்காக பி.ப. 4 மணிக்கு செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ. [illegible]
(மகன்)

(35553)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சாலட் பொன்னம்மா வேலுப்பிள்ளை

திருமதி சாலட் பொன்னம்மா வேலுப்பிள்ளை கர்த்தருக்குள் மரித்துவிட்டார். இவர் கரவெட்டி, கிழக்கைச் சேர்ந்த காலஞ்சென்ற J. S. வேலுப்பிள்ளையின் [இளைப்பாறிய ஆசிரியர்], அன்பு மனைவியும் சற்குணதேவி [ஆசிரியை யாழ். மத்திய கல்லூரி], ஜோன் சற்குணம், நைல்ஸ் நற்குணம் [O. T. S கொழும்பு], எஸ்தர் ஸ்ரீபன்ஸ் கொழும்பு], வில்சன் ஞானகுணம் [U. K], நெல்சன் நேசகுணம் ஆகியோரின் அன்புத் தாயாரும், அருட்திரு S. S. கருணைராஜ் [மெதடிஸ்த திருச்சபை யாழ். சேகரம்), நகுலேஸ் [கொழும்பு], Ivor Stephens (U. K), விமலாந்தி (U. K) ஆகியோரின் அன்பு மாமியாரும், நிஷாந்தி, நிஷாந்தன் [ஆசிரியை, மாணவன் பரியோவான் கல்லூரி], நோயல், நிருபன், நிரோஷி, சிராந்தி, ஜெகா, ருக்சாந், டயானா ஆகியோரின் அன்பு பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் லொக்வுட் இல்லம், 9 வேம்படி வீதியிலிருந்து சுண்டுக்குளியில் உள்ள இலங்கை பெந்தேகொஸ்தே விசுவாச வீட்டிற்கு இன்று 7-3-95 மாலை 6.30 மணிக்கு எடுத்துச் செல்லப்பட்டு நாளை 8-3-95 காலை 10.00 மணிக்கு அங்கு நல்லடக்க ஆராதனை நடைபெற்று, நல்லடக்கத்துக்காக கொட்டடி சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
அருட்திரு எஸ். எஸ். கருணைராஜ்

லொக்வுட் இல்லம்,
9, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.
(35555)

### கந்தையா வேலுப்பிள்ளை

[இளைப்பாறிய யாழ். மாவட்ட தொழிலக லிகிதர், திருகோணமலை சமநலசேவைத் திணைக்கள கணக்காளர்]

புளியங்கூடலை பிறப்பிடமாகவும், சரவணையை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா வேலுப்பிள்ளை (5-3-95) ஞாயிற்றுக்கிழமை அமரத்துவம் எய்தினார்.

இவர் காலஞ்சென்றவர்களான கந்தையா -முத்துப்பிள்ளை தம்பதியரின் புதல்வரும், இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், வாசுகி (ஆசிரியை - பாலர் கல்விக் கழகம்), வாசவன் (சுவிஸ்), வனிதா (யுனிக்கோ கொம்பியூட்டர் சென்ரர் மாணவி), வேலவன் (யாழ். இந்து மாணவன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், செல்வரத்தினம், காலஞ்சென்ற தர்மலிங்கம், மற்றும் வடிவேலு, காலஞ்சென்ற கோபால் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை மற்றும் வியாழம்மா ஆகியோரின் மருமகனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1-00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
திருமதி இராஜேஸ்வரி வேலுப்பிள்ளை
(மனைவி)

தற்போதைய முகவரி:
378, நாவலர் வீதி,
நாவாந்துறை.
(35551)

### திருமதி பாக்கியரத்தினம் பொன்னம்பலம்

துணவி வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், வட்டுக்கோட்டை மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாக்கியரத்தினம் பொன்னம்பலம் காலமானார்.

இவர் காலஞ்சென்ற கார்த்திகேசு பொன்னம்பலத்தின் (மலேசியன் பென்சனியர்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற சுந்தரம்பிள்ளையின் (ஆசிரியர்- யாழ்ப்பாணக்கல்லூரி) அன்புச் சகோதரியும், கார்த்திகேயன் (புட்டபதி, இந்தியா), விமலாதேவி, குமாரவேல்(இங்கிலாந்து), முருகேயன்(வட்டுக்கோட்டை), பாலதேவி சுப்பிரமணியம் வட்டுக்கோட்டை), குமரேயன் (மலேசியா), காலஞ்சென்ற காங்கேயன்(மலேசியா), இந்திராதேவி சங்கரலிங்கம் (வட்டுக்கோட்டை), அகிலாண்டதேவி யோகநாதன் (மலேசியா), சந்திராதேவி (மலேசியா ஆகியோரின் அருமைத் தாயாருமாவார்.

இறுதிக்கிரியைகள் இன்று (7-3-95) செவ்வாய்க்கிழமை நண்பகல் 1 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செ. சங்கரலிங்கம்
[மருமகன்]

திருஞானசம்பந்தர் வீதி,
வட்டுக்கோட்டை.

### பொன்னம்பலம் அன்னப்பிள்ளை

[வேலணை]

வேலணை, சரவணையைப் பிறப்பிடமாகவும், கைத்தனையை வசிப்பிடமாகவும் தற்பொழுது கொழும்பு இராண்ட்பாஸ் இல. 14-J. B. மாடியில் வசித்தவருமான பொன்னம்பலம் அன்னப்பிள்ளை காலமானார்.

இவர் காலஞ்சென்ற பொன்னம்பலம் (கோபாலு) அவர்களின் அன்பு மனைவியும், கந்தசாமியின் (துறைமுக அதிகாரசபை கொழும்பு, பொருளாளர் - சைவ முன்னேற்றச் சங்கம் கொழும்பு) தாயாரும், குலமணி தேவியின் மாமியும், கவிணா [சட்ட ஆலோசகர் ஜபார்ஜி பிறதர்ஸ்), நிர்மலன் [U. K], உதயணன் (U. K) உமேஷன் (வெஸ்லி கல்லூரி) ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பொறளை ஜயரத்தின மலர்சாலையில் 2-3-95 மாலை 3 மணிக்கு நடைபெற்று கனத்தை சிதை மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. உற்றார், உறவினர், நண்பர்கள் இத்தகவலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பொ. கந்தசாமி
[மகன்]
இ. பொன்னுத்துரை
(சகோதரர்)

29, 91, பலாலி றோட்,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்
(35559)

இப்பத்திரிகை நியு உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிற்றெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 298/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 07-03-1995 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org